222.2

# உள்ளம்

மலர் - 1 ★ இதழ் - 1

R. Sivalingam's Books Collections
No: 10, Buntings Lane,
Batticaloa.
Date ............ No ............



## உயர்தர மாணவ இலக்கிய மன்றம்

மட் / பட்டிருப்பு மகா வித்தியாலயம்,
களுவாஞ்சிக்குடி.

(ஐப்பசி 1977)

பட்டிருப்புத் தொகுதியின்
பொருளாதார அபிவிருத்தியிலும்,
வேலை வாய்ப்பிலும்

# பட்டிருப்புத் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

முன்னணியில் நிற்கிறது.

* லொறிப் போக்குவரத்துச் சேவை
* உழவு இயந்திர சேவை
* மீன்பிடி அபிவிருத்தி
* நிர்மாண வேலைகள்
* உடுதுணி, றெடிமேட் சேட், பாடசாலை சீருடை உற்பத்தி
* விவசாய அபிவிருத்தி - உப உணவுப் பொருள் உற்பத்தி
* பேக்கரி - பாண் - பணிஸ் - பிஸ்கட் உற்பத்தி.

மேற்படி எமது அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் உங்கள் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு இன்றே தொடர்புகொள்ளுங்கள்.

பொது முகாமையாளர்,
பட்டிருப்புத் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

தொலைபேசி : 97. களுவாஞ்சிக்குடி.

கிழக்கிலங்கையில்

மீன்பாடும் தேனூடாம் மட்டுமாநகரில்,
நவீன அச்சியந்திரங்கள்மூலம்
குறைந்த செலவிலும், கூடிய சீக்கிரத்திலும் அச்சிட
உடனே விஜயம் செய்யுங்கள்

# கத்தோலிக்க அச்சகம்

18, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

தொலைபேசி :- **364.**

# உள்ளம்

இதழாசிரியர்
ச. ஸ்ரீஸ்கந்தா.

துணையாசிரியர்
வே. அமலநாதன்.

இதழாசிரியர் துணைக்குழு

| | |
|---|---|
| வி. இரகுபதி | த. புஷ்பராசா |
| ஞா. அற்புதானந்தன் | கு. நாகேந்திரன் |

ஆலோசகர் குழு

திரு. நா. நடராசா (ஆசிரியர்)
திரு. அ. இல்லைநாயகம் (ஆசிரியர்)
திரு. சோ. தருமலிங்கம் (ஆசிரியர்)
திரு. க. மாணிக்கம் (ஆசிரியர்)
செல்வி ந. சிற்றம்பலம் (ஆசிரியை)

"உள்ளம்"
உயர்தர மாணவ இலக்கிய மன்றம்
மட் / பட்டிருப்பு மகாவித்தியாலயம்.
களுவாஞ்சிக்குடி.

# நல்லோரின் சொல்லோவியம்

=(×)=

- பிறருக்குரிய கடமையைத் திறம்படச் செய்வதிலும் பார்க்கத் தமது கடமையைப் பிழைபடச் செய்தாலும் கூட அதுவே சிறந்தது. —பகவத்கீதை.

- நல்வாழ்வு என்பது அன்பினுல் உந்தப்பட்டு அறிவினுல் வழிகாட்டப்படுவதொன்ருகும். —பேட்டன் றசல்.

- அச்சம் என்கின்ற வெள்ளம் உட்புகாதவாறு நாம் துணிவு என்கின்ற அணைகளை தொடர்ந்து கட்டிக் கொள்ளவேண்டும். —மாட்டின்லூதர் கிங்.

- பரிசுத்தமான இருதயம் பெண்களின் பெருமையான பரம்பரைச் சொத்து. காதல் அவர்களது அழகான ஆபரணம். —கிளாடியஸ்.

- கட்டளையிடும் பதவி தானுகவே வரவேண்டுமானுல் நீ முதலில் கட்டளைக்கு அடிபணியக் கற்றுக்கொள். —யாரோ.

- கால் தடுமாறினுல் சமாளித்துக்கொண்டு நிற்கலாம், ஆனுல் நாக்குத் தடுமாறினுல் நீங்கள் மீளவேமுடியாது. —பெஞ்சமின் பிராங்ளின்.

- ஓர் தேசிய இனத்தின் உயிர்நாடி. அதன் மொழியாகும். அது அழிகின்றபோது இனம் பிணமாகிவிடும். —யாரோ.

- சலுகைகளை எதிர்பார்த்து உரிமைகளை விட்டுக்கொடுத்தால் இறுதியில் மிஞ்சுவது அடிமைத்தனம். —யாரோ.

தொகுத்தவர் :

**வி. ரகுபதி**

க. பொ. த. (உயர்தரம்) கலை இறுதி.

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து......

வாசகர்களே !

''உள்ளம்'' தனின் உள்ளே செல்லத் துடிக்கும் உங்கள் உள்ளங்களைச் சற்றுத் தாமதப்படுத்தி என் இதயத்தைக் கூறுவதற்கு மன்னிப்பும், அனுமதியும் கோருகிறேன்.

உங்கள் கரங்களில் தவழ்ந்துகொண்டிருக்கும் இந்த 'உள்ளம்' பட்டிருப்பு மகா வித்தியாலய உயர்தர மாணவ இலக்கிய மன்றத்தின் கன்னிப் படைப்பு என்பதை முதலில் கூறிவைக்க விரும்புகிறேன். இது எங்கள் சிறிய அறிவுக்கு எட்டாத குறைகளையும், தவறுகளையும் சுமந்திருக்கும். எனவே, அவற்றை எடுத்துக்கூறி எம்மைத் திருத்தும் கடமை வாசகர்களாகிய உங்களுடையது.

மேலும், என்னை இப்பணியில் ஈடுபடுத்திய உயர்தர மாணவ இலக்கிய மன்றத்திற்கும், ஊக்கமும் ஆக்கமும் தந்துதவிய ஆசிரியப் பெரியோர், மாணவச் சகோதரர்கள், பணவுதவி தந்து அச்சுவடிவில் ''உள்ளம்'' வெளிவர உதவிய பெருந்தகைகள், குறுகிய காலத்தில் அச்சேற்றித்தந்த கத்தோலிக்க அச்சக நிர்வாகிகள், ''உள்ளம்'' தனை உள நிறைவோடு வரவேற்று, இப்பணியைத் தொடர ஊக்கமளிக்கும் வாசக அன்பர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளத்தின் உள்ளே தரமான கட்டுரைகள், கவிதைகள் என்பன உங்களை ஆவலுடன் காத்திருப்பதுடன் உங்கள் அறிவை அளவிடும் போட்டி அம்சங்களையும் கொண்டிருக்கிறது. அவற்றில் இயன்றளவு பங்கெடுக்குமாறு வேண்டுகிறேன்,

தொடர்ந்து வெளிவர இருக்கும் ''உள்ளம்'' பாடசாலைக்கு வெளியில் இருந்தும் இலக்கிய சம்பந்தமான ஆக்கங்களை நாடுகிறது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறேன்.

எனவே, அன்பர்களே தரமான ஆக்கங்களை எமக்கு அனுப்பி 'உள்ளம்' குளிரவைக்கவும்.

நன்றி

ச. ஸ்ரீஸ்கந்தா
இதழாசிரியர்.

# அதிபரின் ஆசியுரை

=(×)=

பட்டிருப்பு மகா வித்தியாலயத்தில் இருந்து "உள்ளம்" என்ற பெயரால் வெளிவரும் சஞ்சிகை ஒன்று அச்சில் வெளிவருவதைக் கண்டு மனம் மிக மகிழ்கின்றேன். உயர்தர மாணவ இயக்கிய மன்றத் தினரால் இம் மலர் வெளிவருகிறது. இந் நிலையில் இம் மலர் சிறப்பு டன் மலர்ந்து அச்சூர்ந்து வருதற்கு மன்றத்தினர் எடுத்த நன் முயற்சி கள் அனைத்தையும் பாராட்டுகின்றேன்.

இப்பத்திரிகையில் ஈடுபட்டுள்ள இதழாசிரியர் குழு, மாண வர் ஆசிரியர் யாவருடைய சேவையும் மிகமிக மெச்சத்தக்கவை. நல்ல கட்டுரைகள், நயமான கவிதைகள், தரமான கதைகள் நிறைந்த புதுமையான படைப்பு "உள்ளம்" என்பதைக் கண்டு எனது உள்ளம் களிப்படைகின்றது.

மாணவர் மன்றங்கள் இவ்வாறு வளர்க்கும் நற்பணிகளே இளைஞர் குலத்தை வளம் செய்து எதிர்காலச் சமுதாயத்தில், அவர் களைப் பெரும் பெரும் தலைவர்களாகவும், சமூக சேவையாளர்களாகவும் ஆக்கி வைக்கின்றன என்பது எனது அனுபவபூர்வமான கருத்து. இன் றைய உலகில் "வாள்முனையிலும் பார்க்கப் பேனமுனையே வலிமை வாய்ந்தது" என்ற பழமொழி மிக மிக உண்மைப்பட்டு வருவதைக் காண்கின்றோம். நல்ல எதிர்க்கட்சி இல்லாத நாடுகளில் பத்திரிகைகளே அப்பணியைச் செய்து ஆட்சியாளர்களைத் திருத்துகின்றன. சமூகத்தில் உள்ள குறைபாடுகளைப் பத்திரிகைகளும், எழுத்தாளர்களும், மாற்றி மக்கள் குழாத்தை நல்வழிப்படுத்துகின்றார்கள். இத்தகைய பெரிய சிறந்த காரணங்களால் பாடசாலையின் பணிகளுள்ளே, நல்ல அறிவாளி களையும், பேச்சாளர்களையும் மட்டுமின்றி எழுத்தாளர்களையும் தோற்று விப்பது முக்கியமான பணியாகக் கருதப்படவேண்டியதன் அவசியம் விளங்குகின்றது. இவைகளுக்கெல்லாம் வாயிலாக அமைவன மாணவர் மன்றங்களும் அவை மூலம் மாணவரால் எழுதப்பெற்று வெளிவரும் படைப்புகளுமாகும். இப்பணியினை நன்கு நிறைவேற்றுகின்றது எங்கள் வித்தியாலய உயர்தர மாணவரின் "உள்ளம்" என்ற இதழ். ஆதலால் இதன் சிறந்த மலர்ச்சி எனக்கும் எனது ஆசிரியர் குழுவுக்கும் பெற் றோருக்கும் நிச்சயமாக மகிழ்வைத் தருவதேயாகும். வாழ்க இந்த இலக் கிய மன்ற உறுப்பினர். வளர்க இவர்களது "உள்ளம்" என்ற அழ கிய இனிய படைப்பு.

மட்/பட்டிருப்பு ம. வி.
களுவாஞ்சிகுடி.

அன்புள்ள,
**வி. சீ. கந்தையா**

# காப்பாளர் கருத்து

=(×)=

"உள்ளம்" என்று பெயர் சூட்டப்பட்டு எங்கள் "கலா சாலை" இலக்கிய மன்றம் வெளியிட்டிருக்கும் இம் மலரை உங்கள் "அன்புள்ளம்" ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன். இப்பணியில் எனக்கும் பங்கு கிடைத்தமையையிட்டு அகம் மிக மகிழ்வுறுகின்றேன். மன்றத்தின் காப்பாளர் என்ற முறையில் சில கருத்துக்களை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். "குறையில்லாமல் பூரணமாக எதனையும் செய்து முடித்தல் இயலாது! முழுக்க முழுக்க மாணவர் முயற்சியில் உருவாகிய இம் மலரை புரிந்துகொள்ளும் பெருமக்கள் குற்றங்களைந்து குணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். மட்டக்களப்பு நயமான கிராமியப் பாடல்களுக்கும், பாடும்மீன் கீதத்துக்கும் பெயர்போன பகுதி. இத்துடன் "முத்தமிழ் வித்தகன் விபுலானந்தனை "பெற்றெடுத்த பதி" இத்தகைய செழும்பதியிலே" பிறவியிலே கலை நாட்டமுள்ள இளம் சிறுர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட இம் மன்றம் சீரிய இலக்கியப் பணிபுரிந்து வருகிறது. இம் மலர் வெளியீடும் இம் மன்றத்தின் பணிகளில் குறிப்பிடத்தக்க முயற்சியாகும்.

இவ்வாண்டின் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இம் மன்றத்தால் மாணவர்கள் எவ்வளவுதூரம் பயனடைந்துள்ளார்கள். என்பதை நோக்கும்போது ஒரு திருப்திகரமான பதிலே எனக்குத் தென்படுகிறது. மாதமிருமுறை கூடும் இம்மன்றக் கூட்டங்களில் சிறந்த சொற்பொழிவுகள் விவாத அரங்கு, கவியரங்கு, சமயோகித நிகழ்ச்சி முதலிய (கலை நிகழ்ச்சிகள்) பயன்தரு நிகழ்ச்சிகளில் பங்குபெற எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக மாணவர்களிடையே உறங்கிக் கிடக்கும் அறிவையும் பேச்சு வன்மையையும், எழுத்தாற்றலையும், தட்டியெழுப்பி அவர்களை நாட்டின் செயற்றிறம் மிக்க பிரசைகளாக்குவதே. இதன் தலையாய நோக்கமாகும். இப்பணியை செல்வனே நிறைவேற்ற உதவும் கருவியாக "உள்ளம்" திகழவேண்டும். மாணவர்களின் இலக்கியப் படைப்புக்களை வெளியரங்கத்துக்குக் கொண்டுவருவதில் முன்னிற்றக வேண்டும்.

ஈழத்தில் தலைசிறந்த "இலக்கிய ஏடாக" இது மிளிர வேண்டும். இதுவே என் ஆசை மென்மேலும் எங்கள் நல்லெண்ணம் வளர்வுற வாசக நேயர்களின் அன்பும் ஆதரவும் என்றும் எமக்குக் கிடைக்கும் என்ற உறுதியான நம்பிக்கை இலக்கிய மன்றத்துக்கு என்றுமுண்டு. வியாபார நோக்கம் சிறிதுமில்லாது மாணவர்களின் கலைப் படைப்புக்களை விருத்திசெய்யும் பெருநோக்கத்துடனே இம் முயற்சியில் இலக்கிய மன்றம் துணிந்து இறங்கியுள்ளது. மன்றத்தின் நிர்வாகிகள், கலாசாலை அதிபர், சக ஆசிரிய சோதரர்கள் நிதியுதவி, விளம்பரம் தந்துதவிய அன்பர்கள் கருணையாளர்கள் அனைவருமே "இவ் உள்ளத்தை உங்கள் கரங்களில் தவழ உயிரூட்டியவர்கள்" என்பதைத் தெரியப்படுத்துவதில் மிக மகிழ்வடைகிறேன் அனைவரதும் அன்பையும், ஆதரவையும், மன்றம் என்றும் மறக்கமுடியாது.

— நன்றி —

மட் / பட்டிருப்பு ம. வி.
களுவாஞ்சிக்குடி.

அன்புள்ள
**நா. நடராசா**

# க வி யு ள் ள ம்

## வாழும் தமிழ்

1. ஈசன் உரைத்த இனியதமிழ் – உல
   கெங்கும் விளங்கும் இளையதமிழ்
   பூசனை செய்து குறுமுனிவன் – தென்
   பொதிகை இருந்து வளர்ந்ததமிழ்
   பேசும் மொழிக ளனைத்தினிலும் - புகழ்
   பெற்ற இனிய அழகுதமிழ் - இந்தக்
   காசினி யோடு உடன்பிறந்தும் இன்றும்
   கனிமை குன்றுது வாழும்தமிழ்.

2. வள்ளுவன் கம்பன் இளங்கோவும் – அன்று
   வாரி அணைத்து மகிழ்ந்த தமிழ்
   அள்ளிப் பருகும் இலக்கியங்கள் என்னும்
   ஆரம் புனைந்து விளங்குதமிழ்
   தெள்ளு தமிழென்று செப்புதற்கே – நல்ல
   சீரிய பண்பு நிறைந்த தமிழ்
   கள்ளி னினிய சுவையுடைய – எங்கள்
   கன்னித்தமிழென்றும் வாழும் தமிழ்.

3. சங்க மிருந்து வளர்த்த தமிழ் - பல
   சாத்திர நூல்கள் படைத்த தமிழ்
   பங்கமற வன்று நக்கீரன் – ஈசன்
   பாடலுக்கே திறனுய்ந்த தமிழ்
   கங்கை நதிமுதற் காலிவரை – ஆண்ட
   கன்னித் தமிழ் மன்னர் காத்ததமிழ்
   மங்களமான இசைநடன - சிற்ப
   வண்ணக் கலைகளில் வாழ்ந்த தமிழ்.

4. தெய்வத் திருமுறை கண்டதமிழ் – என்றும்
   தித்திக்குந் தீங்குறள் கொண்டதமிழ்
   உய்யுஞ் சிலப்பதிகாரமுதற் – பல
   உண்மை இலக்கியம் கண்டதமிழ்
   மெய்பதி னெட்டுக் குயிரீரர் - றுடன்
   மேவிய ஆயுதம் ஒன்றுடனும்
   வைய மனைத்தையு மாழுகின்ற – பெரு
   வல்லமை கொண்டென்றும் வாழும்தமிழ்.

**திரு. அ. தில்லைநாயகம்,**
ஆசிரியர்.

# கலை மன்றமே நீ வருக

1. கலைமன்றமே தமிழ்க் கலைமன்றமே – புது
மெருகொடு மிளிரும் கலைமன்றமே
விலைமதிப்பில்லா அறிவொளியை - எங்கும்
வீசிப்பொலி வொடு நீ வருக.

2. வளரும் கலைஞர் களிகொண்டு – புது
வண்ணப் படைப்புக ளையாத்து
மலரும் புதிய கருத்துகளை - இங்கு
வாரி வழங்கிட நீ வருக.

3. இமையா நாட்டம் புதுமுயற்சி – இவை
இரண்டும் தமக்குத் துணையாக
அமையா நின்ற இளங்கலைஞர் - புது
ஆக்கம் பெருக நீ வருக.

4. வளர வேண்டும் உன்சேவை - அதில்
வடிக்க வேண்டும் புதுமை பல
மலர வேண்டும் எம்மாற்றல் - அதை
வளர்க்க வென்றே நீ வருக.

5. இளைய கலைஞர் எம்படைப்பை
ஏப்பம் விட்டு முது கலைஞர்
களையா வண்ணம் காப்பாற்றிக்
கவலை ஒழிக்க நீ வருக.

**செல்வன் ந. லோகேந்திரன்**
தே. உ. க. த. (வணிகம் முதலாண்டு)

## வெண்பாப் போட்டி

பெயர்:...............................................................

பாடசாலை;...........................................................

முகவரி:..............................................................

.................................... ....................................
கையொப்பம். அதிபரின் ஒப்பம்.

# அறிவுப் பணியாம் ஆக்கமிதே

படித்துச் சுவைக்கும் சிறுகதையும்
பாலற்கினிய பாடலுடன்
நடிப்புக்கேற்ற நாடகமும்
நமது சமூகப் பண்பாடும்
உடுத்துத் தமிழ்த் தாய் உலாவுதல் போல்
உள்ளம் வளர்ச்சி பெற்றுயர்க
அடுத்துத் துணைசெய் மாணவர்கள்
அறிவுப் பணியாம் ஆக்கமிதே.

— வேறு —

காலத்துக் கேற்ற கோலம்
பொலிவொடு கவருந் தங்க
மாலைக்கோர் பதக்கம் போல
மலர்ந்தனை உள்ளத் தங்காய்
சீலமும் கல்விப் பணியும்
சிந்தனைச் சிறப்பும் சேர்ந்து
சாலவும் கேட்கும் ஞானச்
சாத்திரம் உரைத்து வாழ்க.

— வேறு —

உள்ளம் போல வாழ்வினிலே
உயர்வுந் தாழ்வும் உண்டாகும்
தெள்ளத் தெளிந்த ஞானியர்கள்
செப்பும் மந்திரம் இதுவாகும்
கொள்ளும் இன்பங் குறையாது
குலவுந் தமிழ்ப் பேரமுதுண்டு
உள்ளக் கதவைத் திறந்துள்ளே
உலாவி மகிழ்வோந் தோழர்களே.

**செல்வி சோ. கலைவாணி**
க. பொ. த. (உயர்தரம்) கலை இறுதி.

# கண்ணீர் ஒன்றே

1. பாடுபட்டு மிகவுழைத்த கூலிகொண்டும்
படியரிசி தனையேனும் வாங்கொணாது
வீடுவந்து உடல்சோர்ந்து நிற்குமேழை
விடுகின்ற கண்ணீரும் பசிப்பிணியால்
வாடுகின்ற அவன் மனைவி விடுங்கண்ணீரும்
வரண்டமுலை தனைச்சுவைத்தும் பால்காணாது
தேடுகின்ற இளங்குழவி விடுங்கண்ணீரும்
சிறுவர் விடுங்கண்ணீரும் ஒன்றேயாகும்.

2. ஓடாக உருக்குலைந்த குழந்தைக்கூட்ட
ஒருபுட்டிப் பாலுணவு மில்லையென்று
தேடாத இடமெல்லாந் தேடிஓய்ந்து
சிந்துகின்ற கண்ணீரும் சிந்தைநொந்து
மாடாக உழைத்திடுவோர் நல்ல வாழ்க்கை
வாழ்வதற்கு வழியின்றி விடுங்கண்ணீரும்
கூடாத கூட்டமெல்லாம் கூடிக்கெட்டோர்
கொட்டுகின்ற கண்ணீரும் ஒன்றேயாகும்.

3. காலையிலே கூப்பனொடு கடைக்குச்சென்று
கால்கடுக்கக் ''கியூ''வில் நின்றும் துணிஇல்லாமல்
மாலையிலே சோர்வடைந்து வீடுசேர்ந்த
மாதாவின் நிலைகண்டு வருந்தும் மக்கள்
சேலையின்றி முழத்துண்டால் உடல் மறைத்துச்
சிந்துகின்ற கண்ணீரும் தெருக்கள் தோறும்
வேலையின்றி அலைந்திடுவோர் விடுங்கண்ணீரும்
வேதனையால் விடுகின்ற கண்ணீரன்றோ.

4. காடுவெட்டி நிலந்திருத்திப் பயிரைச்செய்து
காசிருந்தும் உரம் எண்ணெய் வாங்கொணாது
வாடுகின்ற பயிர்கண்டு கமத்தைச்செய்தோர்
வடிக்கின்ற கண்ணீரும் மழையில்லாமல்
தேடிவைத்த செல்வமெல்லாம் வயலிலிட்டோர்
சிந்துகின்ற கண்ணீரும் விளையும்போது
ஓடுகின்ற பெருவெள்ளம் மழை அழிக்க
உகுக்கின்ற சுண்ணீரும் ஒன்றுமன்றோ.

5. ஆயிரந்தான் சம்பளமாய்ப் பெற்றபோதும்
அடைவாக உண்டுடுத்து வாழொண்ணாது
வாய்வயிற்றைக் கட்டி இன்று அரியவாழ்க்கை
வாழுகின்ற மக்களுக்கும் கண்ணீரொன்றே
நோய்வருத்தும் கொடுமையினைத் தாங்கொணாது
நொந்து சிந்தும் கண்ணீரும் மருந்து வாங்கப்
போய் அதுவுமில்லாமல் வருந்துமேழை
பொழிகின்ற கண்ணீரும் ஒன்றேயாகும்.

6. புத்தியினைத் துணைக்கொண்டு முயன்று கற்றுப்
புள்ளிகளைப் பரீட்சையிலே அதிகம் வாங்கிச்
சித்தி பெற்ற மாணவர்க்குத் தொழிலில்லாமற்
சிந்துகின்ற கண்ணீரும் திறமையற்றோர்
உத்தியோகம் பெற்றிடுதல் கண்டு நெஞ்சம்
உருக்கின்ற கண்ணீரும் உழைப்பேயின்றி
வித்தைபல புரிந்தேய்ப்போர் நிலைமைக்காக
விடுகின்ற கண்ணீரும் ஒன்றேயாகும்.

7. அழகான திருமுகத்தைக் கவிகள்போல
அலங்கரிக்கும் தம் மக்கள் செய்கை கண்டு
மெழுகாக உருகித்தாய் விடுங்கண்ணீரும்
மெல்லுடலை மறைக்காமல் உடையணிந்து
பழகாத நடைபோட்டுப் பகட்டாய்ச் செல்லும்
பாவையற்காய்ப் பலரிரங்கி விடுங்கண்ணீரும்
பிழையான பழக்கத்தா விளமைகெட்ட
பேதையரின் கண்ணீரு மொன்றேயாகும்.

திரு. அ. தில்லைநாயகம்
(ஆசிரியர்)

---

# குருவடி வணங்கு

வண்ணமயிலே மலர்க்குயிலே – ஒரு
வார்த்தை உரைப்பேனடி
எண்ணமுயர்ந்திட இனியன பேசி
இன்பமாய் வாழ்வோமடி.

ஆரம்பப் பாடம் அன்றுநாம் கற்றோம்
அதன்படி நடந்திடுவோம்
ஈரமுள்ள நெஞ்சாய் என்றும் நாம் வாழ்ந்தால்
இனியவ ராவோமடி.

கல்விச்சாலை வாழ்க்கை காலங்கள் கடந்தால்
கலைந்து போகுமடி
செல்விகள் நாங்கள் தினமும் நாம் படித்து
சீர்பெற்று வாழ்வோமடி.

விருப்போடு நாங்கள் வேண்டியன பெறவே
வித்தாகும் தந்திரங்கேள்
குருவடி வணங்கின் கும்பிட்டுத் தொழுதால்
குறையாவும் நீங்குமடி.

செல்வி அ. மனோரஞ்சிதம்
தே. உ. க. த. மணியியல்.

# காதலுக்கோர் கல்லறை

அன்ருெருகாலம் அலைதிரள் மோதும்
நின்றவர் எதிரே நறுமணம் வீசும்
குன்றிடை தோறும் குதித்து ஓடி
பொதிகை மலையினிம் பூத்துக் குலுங்கும்
இலக்கியக் காதலை எழுத இயம்பினேன்.

தயக்கம் நிறைந்த தாயகக் காதலை
எழுற்சி மிகுந்த இன்பக் கிழற்சியை
போதை மிகுந்த பொல்லாக் கவர்ச்சியை
இத்தனை நிறைந்த இன்ப நுகர்ச்சியை
இப்போது நான் - அதை என்சொல . . . என்சொல . . .

அந்தி நேரத்தில் ஆற்றங்கரையிலும்
மந்திகள் பாய்ந்திடும் மாந்தோப்பினிலும்
கன்றுகள் கதறிடும் கானக வெளியிலும்
கோயில் விழாவிலும் குளத்தங் கரையிலும்
இலக்கியக் காதல் மலர்ந்தது மலர்ந்தது.

அருமையும் பெருமையும் நிறைந்த காதலை
பழமையைக் கெடுக்கும் பாசாங்குப் பேய்களை
இளமை கெடுக்கும் எழிய உணர்ச்சிக்கு
அடிமை கொள்ள செய்யும் மனிதனுக்கு
காதலுக்கோர் கல்லறை கன்னியர்க்கோர் சொல்லறை.

**செல்வன் லூ. அற்புதானந்தன்**
க. பொ. த. (உயர்தரம்) கலை இறுதி.

---

# தெள்ளு குறள்

வள்ளுவப் பெருமான்
உள்ள நிறைவுடன்
வாரி வழங்கியதாம் - உயர்
தெள்ளு குறள்தன்னை
அள்ளிப் பருகிடில்
சிந்தை தெளிந்திடலாம் - உள
பந்தம் அழிந்திடவே.

முத்தமிழ் ஈன்ற - நல்
வித்தக வள்ளுவன்
தித்திக்கும் தீங்குறளை
எத்தனை பாஷையில்
சித்தம் கவர்ந்தவர்
நித்தம் படிக்கின்றனர் - அவர்
பித்தம் தெளிந்திடவே.

**செல்வி. பூ. வயிரமணி,**
க. பொ. த. (உயர்தரம்) கலை இறுதி

# மேன்மையான செல்வம்

1. சின்னச் சின்னக் கண்ணே உந்தன்
செவ்வலறி இதழினிலே
வெண்ணநிலா ஊர்ந்து வரும் (சிரிப்பு)
வடிவு கண்டு மகிழ்ந்தேனடி.

2. நல்லிரவு நான்காம் ஜாமம்
நாத்தட்டிந் தந்தை தாயை
மெய்வலி நீக்கியன்பு
மெத்தையிலே நீ விடுப்பாய். (சின்னச் சின்னக்)

3. தத்தித் தத்திக் காலிரண்டும்
தந்தனத் தாளமிடும்
எத்தியெத்திக் கையிரண்டும்
என்னை எங்கோ இழுக்குதடி. (சின்னச் சின்னக்)

4. பால்மணம் மாறுப் பச்சை
பாலகனே நீ அழுதால்
வேல்விழி மாதர் தங்கள்
மேன்மையாம் செல்வமதே! (சின்னச் சின்னக்)

**செல்வி மு. சுகுமாரி,**
தே. உ. க. த. மனையியல்.

---

# நாடி நலம்புரிவோம்

ஏர் இருக்கு கையிருக்கு எமக்கேது பஞ்சம்
ஏற்றிடுவோம் ஏரை எங்கள் கைப்பலத்தினால்
நீர் பெருக ஏரிகுளம் வெட்டி நீரைத் தேக்கி
நீண்ட வடிகால் வழியே நிலம் சேரவைப்போம்.

பலபுதிய நெல்லினத்தை பயிராக்கி மகிழ்வோம்
பச்சை நிற மயமாக்கி நிலம் போர்வை கொள்வோம்
குலை குலையாய் ஆடுகின்ற நீண்ட நெற்கதிர்கள்
சலசலவென்றே இசைக்கும் தேசிய கீதத்தை.

அலையொலியாய் கீதம் வழிக்குருவிகளை அழைத்து
இனியமுது விருந்தளித்து இன்புற்று இரங்கும்
தென்றலசைந்தாடி வந்து நெற்குலையைத் தடவ
மெல்லெனவே நிலம் சாய்ந்து, மேல்நோவைத் தீர்க்கும்.

சோம்பலின்றி நாலுபேரும் சேர்ந்து வேலை செய்வோம்.
சொந்த நாடு செல்வமாகச் செழித்திடவே செய்வோம்.
நாம் புரிந்த சேவையிலே யாவருமே உயர
நல்லவழி தருகவென நாடி நலம்புரிவோம்.

**செல்வன் இ. தவராசா**
க. பொ. த. (உயர்தரம்) கலை இறுதி.

# "என்ன புதுமை இது"

## வெண்பாப் போட்டி

=(×)=

உள்ளம் இரண்டாவது இதழில் வெண்பாப் போட்டி யொன்றை நடாத்த உத்தேசித்துள்ளோம். முதலாவதாகத் தெரிவு செய்யப்படும் வெண்பாவை யாத்தவருக்கு ரொக்கப்பரிசாக ரூபா பத்தும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும், முறையே 2ம், 3ம், இடங்களைப் பெறும் வெண்பாக்களை யாத்தவர்கட்கு பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்படும். மேலும் தேர்ந்தெடுக்கப்படும் ஏழு வெண்பாக்களையும் சேர்த்து யாத்தவர்களின் பெயர் விலாசத்துடன் எமது பத்திரிகையிற் பிரசுரிக்கப்படும் போட்டியாளர்கள் யாவரும் பின்வரும் நிபந்தனைகட்கமைய ஒழுக வேண்டும்.

### நிபந்தனைகள்

1. வெண்பாக்கள் யாவும் இலக்கண வழுவின்றி. "என்ன புதுமை இது" என்னும் ஈற்றடியைக் கொண்டனவாக அமைதல் வேண்டும்.

2. இப்போட்டியில் மாணவர்கள் மாத்திரம் பங்குபற்றலாம். எப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கட்கும் போட்டியிற் கலந்து கொள்ளும் உரிமை உண்டு. மாணவருடைய சொந்த ஆக்கம் என்பதை பாடசாலை அதிபர் அல்லது உப அதிபர். அல்லது அப்பாடசாலை ஆசிரியர் ஒருவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

3. ஒருவர் ஒரு வெண்பாவை மாத்திரமே எழுதி அனுப்புதல் வேண்டும்.

4. வெண்பாக்கள் யாவும் 10-12-1977 முன்னர் கிடைக்கக்கூடியதாக

"உள்ளம்" இதழாசிரியர்
பட்டிருப்பு ம. வி.
களுவாஞ்சிகுடி.

என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெண்பாப் போட்டி" எனக் குறிப்பிடுதல் வேண்டுல்.

6. சிறந்த வெண்பாவைத் தேர்ந்தெடுப்பதில் நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதி முடிவாகக் கொள்ளப்படும்.

6. போட்டியாளர்கள் தாம் அனுப்பும் வெண்பாவுடன் இப்போட்டிக்கென "உள்ளம்" இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கூப்பனையும் பூரணப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

# மன்றப் பணியாளர்கள்

காப்பாளர்
திரு. நா. நடராசா B. A. (Cey) ஆசிரியர்

தலைவர்
செல்வன் லூ. அற்புதானந்தன்

துணைத்தலைவர்
செல்வி சி. சித்திராஞ்சனி

செயலாளர்
செல்வன் வி. இரகுபதி

துணைச் செயலாளர்
செல்வி இ. விக்கினேஸ்வரி

பொருளாளர்
செல்வன் கு. நாகேந்திரன்

இதழாசிரியர்
செல்வன் ச. ஶ்ரீஸ்கந்தா

துணை இதழாசிரியர்
செல்வன் வே. அமலநாதன்

எழுத்தாசிரியர்கள்
செல்வன் வே. சண்முகம்
செல்வன் அப்துல் கபார்
செல்வன் இ. தவராசா
செல்வி மா. மகேஸ்வரி

ஓவியர்கள்
செல்வன் லூ. அற்புதானந்தன்
செல்வன் க. சிவக்கொழுந்து
செல்வன் மா. கறுவல்தம்பி

தணிக்கைக்குழு
திரு. சோ. தருமலிங்கம் B. A. (Cey) ஆசிரியர்
செல்வி ந. சிற்றம்பலம் B. A. (Cey) ஆசிரியை
திரு. அ. தில்லைநாயகம் ஆசிரியர்

கணக்காய்வாளர்
செல்வி ச. கந்தையா B. Sc. ஆசிரியை

செயற்குழு
செல்வன் ச. புஸ்பராசா
செல்வன் க. சீதாராம்
செல்வன் க. கனகசிங்கம்
செல்வி வ. பாக்கியராணி
செல்வி த. சரோஜினி
செல்வி க. அமிர்தநாயகி
செல்வி க. இரத்தினசோதி

# கருத்துள்ளம்

## நாட்டுப் பாடல்களும், சமூக வாழ்க்கையும்

ஈழ நாட்டிலே கிராமியக் கவிதை நயம் நிறைந்த பகுதி மட்டக்களப்பு. தேனுக்கும், பாலுக்கும் தமிழர் வீரத்திற்கும், பெயர் பெற்ற மட்டக்களப்பு மக்களின் கலைகளைப் பேணி வளர்ப்பதிலும் சிறந்து விளங்குகின்றது. காட்டிலும், மேட்டிலும், வயலிலும், வரம்பிலும், நாட்டிலும், நல்வீட்டிலும், மாலையிலும், காலையிலும், ஏடறியாத இலக்கணம் தெரியாத ஆணும், பெண்ணும் ஆடிப்பாடும் போதும். கூடிக்குலவிக் கூக்குரலிடும் போதும் சிதறித் தெறித்த நல்முத்துக்களே நாட்டுப் பாடல்களாகும். இது சாதாரண மக்களின் பரம்பரைச் சொத்தாகும். கல்வியறிவு பெறாத கிராம வாசிகள் தமது நாளாந்தத் தொழிலரங்கில் தாமே பாடித் தாமே கேட்டுச் செவிக்கருவியாய் மனதில் தாமே எழுதிப் பிரசுரம் செய்து இதை வளர்த்து வருகின்றவர். இப்பாடல்களிற் பெரும்பாலானவை அகத்திணையைச் சார்ந்தவையே. வயல் உழுகின்றவர்கள், வேளாண்மை வெட்டுவோர், சூடு மிதிப்போர், வண்டில் இழுப்போர், நீரிறைப்போர் முதலியோரும் தம் உடல்நோ மறந்து பாடுகிற பாடல்களும் நாட்டுப் பாடல்களாகும்.

நாட்டுப் பாடல்களிற் சில இலக்கண வரம்பிற்குட்பட்டிருக்கும் எழுத்தறிவில்லாத இத்தகைய தொழில் செய்யும் சில மக்களின் உள்ளத்திலே பொங்குகின்ற உணர்ச்சி கவிதையாகப் பெருகுவதுண்டு. இப் பாடல்களிலே ஓசையின்பம், தாளக்கட்டு, சொல்லழகு என்பன இருக்கும். சில நாட்டுப் பாடல்கள் இலக்கண வரம்பை மீறியிருக்கும். இவற்றைக் காலவெள்ளமும் கரைத்திடாது, கடல் வெள்ளமும் அழிந்திடாது ஏட்டிலேழுவிடினும் இவ்வாறு தோன்றும் இன்னலினாலும் அழிந்துபோகாது, தலைமுறை தலைமுறையாக வழங்கிவரும் சிறப்புக் கொண்டு நம்மைச் சந்தோஷத்தில் திளைக்க வைக்கும் ஆற்றல் படைத்த இலக்கியமாக உள்ளது இந்த நாட்டுப்பாடலாகும்.

எழுத்துமூலம் பெற்று அறிஞர்களாற் படித்துப் போற்றப் பட்டுவரும் கவிதைகள் எல்லாம் நல்ல புலவர்களின் ஆக்கங்களினாலானவை. செய்யுள்களுக்குரிய இலக்கணம் நிறைந்தவை. நல்ல கருத்துக்களினால் கற்போர் கருத்தைக் கவரும் தன்மையின. கற்பனைச் செறிவும். உவமையும், உருவகமும் முதலான பல்வேறு அணிகளினால் அழகு பெற்று நிற்பவை. ஆனால் நாட்டுப் பாடல்கள் கற்பனையூற்றிற் பிறக்கும் செய்யுள்களைப்போலன்றி உணர்ச்சிப் பெருக்கினையே அடிப்படையாகக்கொண்டு பிறப்பன. இப்பாடல்களில் பொய்க்கோ, புழுகுக்கோ இடமில்லை. நேரடியாகக் கருத்தை விளக்கும் செம்மொழிகளேயன்றி கற்பனை இங்கே இடம்பெறுவதில்லை. வான்புகழ் வள்ளுவன், இளங்கோ

முதலிய புலவர்களே சிறந்த புலவர்கள் என்றது போன்ற சிறப்புத் தன்மையும் இப்பாடல் ஆசிரியர்களிடம் இல்லை. சமயம் வரும்போது வயற்காரனும், வண்டி இழுப்பவனும், மீன் பிடிப்பவனும்கூட நல்ல உயிரோவியங்களைப் படைத்து விடுகிறார்கள் இக் கவிதையுலகிலே.

உணர்ச்சி வயப்பட்ட ஒருவன் தன் உள்ளக் கருத்தை வெளியிடும்போது சொல்லடுக்குகள் இயல்பாகவே ஒரு ஒழுங்கில் அமைந்து விடும். இதைக் கேட்பவனுக்கு உணர்ச்சி வயப்பாட்டினால் அவனது பதிலும் ஒரு ஓசையுடனேயே அமைகின்றது. இவ்வாறு பொது மக்களின் உணர்ச்சி வேகத்தில் எழுந்தபடியினால் இன்னும் இவைகள் பண்பட்ட பாடல்களாகக் கணிக்கப்படுகின்றன.

இப்பாடல்கள் யாவுமே சமூக வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. இன்பத்தினையும் இன்ப வாழ்வின் படியினையும் பிற்காலத்துக் கவிஞர்கள் மக்களின் சாதாரண வாழ்விலிருந்து பிரித்து வைத்து விட்டனர். ஆனால் நாட்டுப் பாடலில் காதலிலக்கியம் இயல்பாகவே பாடப்பட்டுள்ளது. நாட்டுப் பாடல்கள் எல்லோரினதும் காதல் நிகழ்ச்சிகளையும் உயர்ச்சியுறக் காட்டுகின்றன. இப்பாடல்கள் சந்தர்ப்பத்திற்கேற்ற முறையில் பாடப்பட்டுள்ளன. இவை மக்கள் மொழியாகக் கிராமத்தில் இருந்தாலும் சொற்கள் இலக்கிய சம்பந்தமானவையே அங்கு சிறந்த உவமைகள் உண்டு.

பருவமடைந்த பெண்ணின் எதிர்கால வாழ்க்கையை உத்தேசித்து குடும்பத்தாரிடையே அக்கறையிருந்ததால் பெண்ணின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டிருந்த செய்திகளையும் உறவு முறையான மாமன்மகளை விரும்பிய ஆடவன் கொண்ட காதலையும் நாட்டுப்பாடல்கள் கூறுகின்றன.

'' தண்ணிக்குப் போ மகளே
தரியாமல் வா மகளே
கண்ணுக்கு உயர்ந்தவரை
கடைக்கண்ணாலும் பாராதே '' என்னும்

நாட்டுப் பாடல் பெற்றவளின் அறிவுரையை எடுத்தியம்புவன. காதலரிருவர் கவிதையும் கதையுமாக உரையாடிக்கொண்டிருந்தனர். தங்கள் இல்லம் செல்ல முற்பட்டனர். தான் மாலை நேரத்தில் வருவதாயும், தனக்காகத் திண்ணையில் வந்திருக்கும்படியும்,

''தங்கக் குடமே நடை தத்தியொரு நங்கணமே
செக்கலுக்கு நான் வருவேன் திண்ணையிலே காத்திருப்பாய்''

என்று கூறிச்செல்ல முற்பட்டான். காதலன் காதலியும் பிரிந்து செல்கையில்

''வந்து வழி பண்ணிடுங்கோ வம்புக்கிடம் வையாதிங்கோ
பூத்தமரம் காய்க்கு மென்றால் இந்தப் பூவன்றோ கைதருகும்''

என்று வாதுக் கவி பாடிக்கொண்டே போனாள். இவ்வாறே அவனும் திரும்பவும் அவளுக்கு எதிர்வாது சொல்கிறாள்.

தொழில் சார்ந்த நாட்டுப் பாடலில் பெரும்பாலானவை உழவரின் வாழ்வைப் பிரதிபலிப்பன. மழையை நம்பி வேளாண்மை செய்வதை '' ஒரு போக வேளாண்மைக்கு உயர்வானைப் பார்ப்பது போல்'' என்கிறது நாட்டுப்பாடல். வயலில் உழவு, மிதிப்பு என்பன நடைபெறும்போது வேலை செய்வோர்,

''வரம்போ தலகாணி தம்பி செல்வா உனக்கு
வாய்க்காலோ பஞ்சு மெத்தை
இந்த நடை நடந்து தம்பி செல்வா – நாம்
எப்போ கரை சேர்வோமடா'' என்ற ஏர்ப்பாட்டுக்

களைப் பாடிக்கொண்டே வேலை செய்வர். இந் நாட்டுப் பாடலில் மட்டுமன்றி பேச்சு வழக்கிலும் மக்கள் தங்கள் கால் நடைகளைப் பெயர் சொல்லியே அழைப்பர். இந்த இன்னிசைப் பாடல்களால் ஏர்க்களத் தோடும் வேலைக் கடாக்களும் நோ மறந்து தம் தொழிலை விரைவாக நடாத்துவர். இவ்வாறு இவர்கள் வயலில் பொலிப்பாட்டுக்களையும் பாடுவார்கள். உழவர் வாழ்வில் கலப்பை போன்றே மாடுகளும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இதனால் மாடுகள் பற்றியும் நாட்டுப் பாடல்களில் வருகின்றன. வயதான உழவர்போல் மாடுகள் முதுமை எய்திவிட்டன. இதனை உடமைக்காரனிடம் செய்கைக்காரனாகிய உழவனே

'' மாடும் வயதாளி
மாட்டுக்காரன் குமராளி
நானுமொரு நோயாளி
இழுக்குதில்லை முதலாளி'' என்று முறை

யிட்டு அதை இசையுடன் கூறுகிறான். வயலிலே ஆண்கள் மண் வெட்டர். காவல்காத்தல் போன்ற வேலைகளோடு வாடியிலும் வேலை செய்வதை நாட்டுப் பாடல்கள் சித்தரிக்கின்றன. கார்காலத்திலே உலகம் முழுவதும் நீரைப் பெறுகிறது என்று கூறவே,

''காராளை நீரெழுந்து துளி ஆலமெல்லாம் நீர் குடித்த
வானங்கறுத்தமாரி செய்புங் கார்காலம்'' என வருணிக்

கப்பட்டுள்ளது.

காதலனின் உள்ளக் கிடக்கை காதலி அறியமாட்டாள். ஆனால் காதலனின் உருவம் அவள் கனவிலே தோன்றுகிறது. எனவே அவளுக்கு ஓர் ஐயம் ஏற்படுகிறது. அதனை அறிவதற்கு யார்தான் உதவி செய்யக்கூடும் என எண்ணுகிறாள். அதனையறிய யாரால்தான் முடியும் என்று இறைவனிடமே கேட்கிறாள். யாம் அறியாத அனைத்தையும் அறிந்து வைத்திருக்கிறவன் இறைவனல்லவா? நமது சமய போதனையும் அதுதானே எனவேதான் காதலி இறைவனை விளித்து தனது ஐயப்பாட்டை எடுத்துக் கூறுகிறாள் இவ்வாறு.

''மனசை மன மறியும் வஞ்சகத்தை நெஞ்சறியும்
மனசிலுள்ள பூங்காரத்தை இறைவனன்றி யாரறியப்போறாங்க''

கல்பு என்பது அரபுச்சொல். கல்பு என்றால் இதயம் என்பது பொருள். எந்தப் பொருளைப் பெறுவதற்கும் இதயப்பொருத்தம் இன்றியமையாததாகும். மனம் இணங்குதல் அவசியமாகும். பல காரணமாயினும் மன இணக்கம் இல்லாமல் பெறமாட்டேன் என்று கூறும் காதலன் கூற்றாக ஒரு நாட்டுப்பாடல் அமைந்துள்ளது.

''பச்சை மரகதமே பலகாரண மென்றாலும்
கல்பு பொருந்தாமல் நான் கைநீட்டி வாங்குவேனா''

பெண்கள் இல்லங்களிலே உணவு சமைத்தலுடன் வருவாய்க்காக கோழி வளர்ப்பதையும் பிறவேலைகள் செய்வதையும் நாட்டுப் பாடல்கள் அழகாகச் சித்தரிக்கின்றன. மக்களின் அன்றாட வாழ்க்கையில் இடம் பெற்று வந்த உணவு, உடை குறித்தும் நாட்டுப்பாடல்கள் குறிக்கின்றன.

''கீரை கடைஞ்சிருக்கேன் கிரிமீன் தீச்சிருக்கேன்
வாழைப்பழம் வாங்கிருக்கேன்'' என்னும் அடிகள்

அவர்களது உணவைக் குறிக்கின்றன. அக் காலத்தில் ஆண்கள் மோதிர மணிந்து சாரன் உடுத்து லேஞ்சி கட்டியிருந்ததை ''விரல் நிறைய மோதிரமும்'' சாரமுடுத்து சரியான லேஞ்சிகட்டி என்னும் அடிகள் குறிக்கின்றன.

இவ்வாறு பார்க்கும்பொழுது மட்டக்களப்பு நாட்டுப் பாடல் களிலே இஸ்லாமியச் சாயல் வழிந்தோடுவதைக் காணலாம். இஸ்லாம் மொழியில் தமையனுர் காக்கா என அழைக்கப்படுவார். நாட்டுப் பாடல்களிலும் இச்சொல் இதே கருத்திலும் ''காக்காமார் இல்லே'' என்றும் ''உங்க காக்காமார் சம்மதமோ'' என்றும்

''வாப்பாருக்கார் பன் அறுக்க உம்மாருக்கார் பாய் இழைக்க
காக்காருக்கார் விற்றுவர இந்த கரவாகான் வேணுமுங்க''

என்று பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். இவ்வாறு சமூக வாழ்க் கையின் பல்வேறு சமூக அம்சங்களேயும் வாழ்க்கைக் கண்ணுடியாக நாட் டுப்பாடல்கள் அமைந்துள்ளன. பல கிராமங்கள் தோறும் சிதறிக் கிடக் கும் இக் கவிதைகள் ஒன்ருக திரட்டப்படாமலும், ஏடறியாமலும் இருக்கின்றன. அதனுல் காலவெள்தால் அழிந்துபட்டவை அருந்தம் சுற்றறிந்தோர் சிந்தைக்கு விருந்தாகவுள்ள இக் கவிதைகள் எழுத்து வாசனேயற்ற மக்களின் உள்ளத்தில் பிறந்த முத்துக்கள் தமிழ் கூறும் எதிர்கால சந்ததியினர் படித்து அனுபவிக்கத் தக்கதாக இவையாவும் ஒன்று திரட்டப்படுதல் அவசியமாகும்.

**செல்வி சித்திரா சிவனேசராசா**
க. பொ. த. (உயர்தரம்) கலே இறுதி.

---

# இலக்கியப் படைப்பு ஏன்?

மனிதன் பேசவும் எழுதவும் தெரிந்த காலம் தொடக்கம் இன்றுவரை தனது சிந்தனே ஆற்றலால் கருத்தை மையமாக வைத்து அதற்குக் கற்பனே முலாம் பூசி பேச்சிலக்கியமாகவும், எழுத்திலக்கிய மாகவும் படைத்துள்ளான். இவற்றிற்கு நிலேக்களன் அவன் உள்ளம். அவ் உள்ளத்தின் உணர்ச்சிப் பிரதிபலிப்பே இலக்கியம். இவ் இலக்கி யங்கள் எடுபடுவதற்குக் காரணங்கள் பலவுண்டு. அவற்றில் முதன்மை யும் உரிமையும் பெறுவது இலக்கியப் படைப்பின் நோக்கம் என்று சொல்லலாம். அதனேத் தொடர்ந்து இலக்கியச் சிந்தனேக்கான கற்பனே வளம், கையாளும் சொற்கள் அவை ஒழுங்குபடுத்தியமைக்கப் படுமாற் றல் என்பனவாகும். உதாரணமாகத் தனித்தனிக் கற்களே ஒழுங்குற அடுக்கி அவற்றை நிலேநிறுத்திப் பொருத்தத் துணேயாக நிற்கும் சாந்து அவற்றை மேலும் பலமும் அழகும் படுத்தும் மேற்பூச்சு அதனிடையே அமைந்துள்ள நுட்பமான வேலேப்பாடு, நுழைவாயில், சாளரங்கள் பொருத்தமான கூரை என்பன கொண்டமையும் பலமும் அழகுமமைந்த கட்டிடம் போன்றதே இலக்கியப் படைப்புமாகும்.

இனி, ஏன் இலக்கியம் எனும் கேள்விக்கு விடையிறுக்குங் கால் அது ஒரு பொழுதுபோக்குச் சாதாரணமாக மாத்திரம் இருத்தல்

முற்றிலும் பொத்தமற்றது. ஓய்வு காலங்களில் சாய்வுநாற்காலிகளில் இருந்துகொண்டு படிப்பதற்கோ அது அலுத்துவிட்ட பிறகு அதனை மூடிவைத்து அப்பால் தம் எண்ணங்களை மாற்றிக்கொள்ளவோ அவை அமைதலும் கூடாது. அதனைப் பயன்படுத்தலும் கூடாது. மன்னர்களை யும், ஓரிரு தலைவர்களையும் உல்லாசபுரி வாழ்க்கைக்கான மேல்மட்டச் சிந்தனையோடு கூடிய பொழுதுபோக்கு இலக்கியங்கள் எல்லாம் புத்தக அலுமாரியை மாத்திரம் அலங்கரிக்கும் பொருள்களாக இருப்பதை நாம் காண்கிறோம். சமுதாய நோக்குடன் கீழ்மட்டக் கண்ணோட்டத்தில் தானும் அந் நிலைக்காளாகிப் படைக்கப்படும் இலக்கியங்களே மக்கள் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அது ஒரு வழிகாட்டியாகக்கூட மாறி விட்ட நிலையினை இன்று நாம் உணர்கிறோம்.

இலக்கியம் என்பது தன்னுடு தன் சமுதாயம் விட்டு உலகம் முழுவதும் பரவலாக ஏற்கும் நிலையினைப் பெற்றாக வேண்டும். இத னையே பாரதியும் ''திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்யவேண்டும்'' என்றார். ''காலம் இலக்கிய கர்த்தாக்களை உருவாக்குகின்றது.'' இது மேற்கோளும் கண்கூடும் கூட. இலக்கியம் இதுபற்றித் தான் இருக்கவேண்டிய நியதியில்லை. அதே வேளையில் எடுத்துக்கொண்ட கருப்பொருள்களை விளக்குவதைவிட்டு விலகிச் செல் லவோ, அதன் மூலம் தனது நோக்கை மாத்திரம் நிலைநிறுத்த வேண்டு மென்பதோ கூடாது. எதுவானாலும் அது பற்றிய யதார்த்தம் அங்கு முக்கியம். இவற்றைவிட மேலாகச் சேரிவாழ்க்கை வாழ்ந்து கொண்டி ருக்கும் ஒரு சமுதாய இலக்கியாளன் உல்லாசபுரி வாழ்க்கைபற்றிக் கற்பனை வளத்துடன் கட்சிதமாகப் பாடினால் அது ஒரு சமுதாய இலக் கியக் கொலை என்றுங்கூடக் கூறலாம்.

முடிவாக இலக்கியங்கள் சமுதாயப் படைப்பினதாக சமு தாயச் சீர்திருத்தச் சாதனமாக, சமுதாய வழிகாட்டியாக இலகு நடை யினதாக, அழகு உருவினதாக, புதுமையானதாக இன்னும் சிறப்பா ஒரு புதுக் கண்டுபிடிப்பானதாகவே இருத்தல் வேண்டும்.

''பாடுதற்கு இல்லையடா எனது பாட்டு
பாடுபட்டு உழைப்போன் தூக்கி ஆடுகின்ற ஆயுதமோ எனது பாட்டு''

எனும் நன்னுணர்வு நிலையினை இலக்கியங்கள் பெறல்வேண் டும். இந் நிலையினையே இலக்கியங்கள் மெல்ல மெல்லப் பெற்றுவரும் மேன்மை நிலையினை நாம் காண்கிறோம். தொடர்ந்தும் பழமை பேசுதல் பொருத்தமற்றது.

**திரு. செ. விநாயகமூர்த்தி**
ஆசிரியர்.

---

## உன் இதயத்திற்கு......

''உன் இதயம் என்னைப்போல் விசாலமாக இருக்கவேண்டும்'' என்று வானம் கூறுகிறது.
''என்னைப்போல் பொறுமையாக இரு'' என்று கூறுகிறது பூமி.
''என்னைப்போல் குளிர்ச்சியாகவும் அமைதியாகவும் இருக்க வேண்டும்'' என்று கூறுகிறது காற்று.
''என்னைப்போல் மற்றவர்களுக்கு உதவி செய்'' என நினைவு படுத்துகிறது தண்ணீர்.
''அநியாயங்கள் அனைத்தையும் எரித்துவிடு'' என்று கூறுகிறது நெருப்பு.

தொகுப்பு:- செல்வி யசோதா நாராயணபிள்ளை,
க. பொ. த. (உயர்தரம்) இறுதி.

# சங்கீதத்தின் பெருமை

சங்கீதம் என்பது செவிக்கு இன்பத்தைத்தரும் த்வனி களைப்பற்றிய கலையாகும். அது சிறந்த கலைகளில் ஒன்று. சிறந்த கலைக ளாகிய லலித கலைகளில் அதிமிக்க மேன்மையான கலையாகும்.

மனிதர் மிருகங்கள். பண்டிதர் பாமரர் விருத்தர் பாலர் முதலிய எல்லோருக்கும் இன்பத்தைத் தரக்கூடியது. சங்கீத்ய பசு, சர்ப்பம் போன்றவை கானரசத்தை உணர்கின்றன.

சங்கீதத்துக்கு காந்தர்வவேதம் என்று பெயர் காந்தர்வ வேதம் நான்கு உபவேதங்களில் ஒன்று. கடவுள் வழிபாடு செய்வதற் கும். கடவுளை அறிவதற்கும் சங்கீதம் ஒரு முக்கிய சாதனமாகும். இக்காரணம் பற்றியே. சங்கீதத்தை ஒரு வித்தைஎனப் பெரியோர் கூறுவர். கடவுள் நாதப்பிரம்மமாக விளங்குகிறார்.

சங்கீதம் ஒரு தெய்வீகமான கலை என்பதற்கு சிவபெருமான் கையில் டமருகமும் கண்ணபிரான் கையில் குழலும் சரஸ்வதி தேவி கையில் வீணையும் இருப்பது ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. சங்கீதமும் சாகித்தியமும் சரஸ்வதி தேவியின் இருஸ்தானங்களாகும்.

வீணை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவனும் சுருதி சாஸ்திரத் தில் நிபுணனுனவனும் தாள ஞானத்தை அடைந்தவனும் பிரயாசை யின்றியே. மோட்ச உலகத்தை அடைகின்றான் என்று, ஸ்ரீ தியாகராஜ சுவாமிகட்கு, கிடைத்த ஸ்வரார்நவம் என்னும் நூலில் காணப்படு கின்றது. மனிதனுக்கு இறைவனால் அருளப்பட்ட குரல் பேசுவதற்கு மட்டுமல்ல, பாடுவதற்கும் கூட என்பதை உணரவேண்டும். பாடுங் கால்தான் ஒருவன் தன் குரலின் பூரணத்தை அடையமுடியும் கைவிரல் களும் இசைக் கருவிகளை பயிலுவதற்காகவே. வித்தியாசமான முறை யில் அமைந்துள்ளன. மனித தேகத்தில் அமைப்பிலும் இசை சம்பந்த மான பல தத்துவங்களைக் காணலாம். (எ — டு)

1. மனித குரல் காற்று வாத்தியத்தின் அமைப்பையும்.
2. காது தோற்கருவியின் அமைப்பையும்.
3. உட்காது நந்திவாத்தியத்தின் அமைப்பையும் உணர்த்துகின்றது

உத்தமமான சங்கீதத்தை நாம் கேட்கும்போது உட்காதி லுள்ள நுண்ணிய நரம்புகளுக்கு உணர்ச்சி உண்டாகி அதன் மூலம் தெய்வீக உணர்ச்சி நமக்கு உண்டாகிறது. இக்காரணம் பற்றியே திரு வள்ளுவர் செவிச் செல்வத்தை புகழ்ந்து கூறியுள்ளார் திருஞான சம் பந்தர். முதல்முதல் பாடிய தோடுடைய செவியன் என்னும் தேவாரத் தில் சிவபிரான் செவியை முதன் முதலில் கூறியதும் உணரலாம்.

கானம் செய்யும் பொழுதும் கானத்தைக் கேட்கும் பொழு தும் நாம் இவ்வுலக கவலைகளை மறந்து இன்பமடைகிறோம் இத்தகைய அரிய சக்தி இசைக்கே உரியது.

**செல்வி நி. சண்முகம்**
(ஆசிரியை)

# நாடகமும் சினிமாவும்

நாடகம், சினிமா இரண்டும் மக்களை மகிழ்விக்கத் தோன்றிய கலைகள். நாடகத்தின் நவீன பிறப்பே சினிமா என்ற உண்மைகளை ஒப்புக்கொள்ளும் அதே நேரத்தில் மூலக் கொள்கையளவில் அதாவது கருப்பொருள் ஒன்ருக இருப்பினும் இரண்டும் கையாழும் விதத்தில் முற்றிலும் வேறுனதே என்பதையும் மறக்கமுடியாது. அசலும் நிழலுமாக இருக்கும் இரண்டையும் ஒன்ருக்கியே தமிழ் இரசிகர்கள் பார்த்துப் பழக்கப்பட்டு அதுவே சரி என மயக்கநிலையில் இருப்பதாலேயே இன்று நாடகத்தில் சினிமா யுத்திகளும் நிறைந்துள்ளது. நாடகத்தை நாடகமாகவும் சினிமாவைச் சினிமாவாகவும் ரசிக்கப் பழகும் வரை தூய்மையான கலையை நாம் காணப்போவதில்லை அப்படி ஒரிருவர் முயன்ருலும் அதைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே பார்த்தவர்களிலும் அதைப் புரிந்து கொள்பவர்கள் மிகச் சிலரே.

ஒரு நாடகத்தைத் தயாரிக்கும்போது தயாரிப்பாளன் ஓரளவிற்குச் சுதந்திரத்துடன் கடமையாற்ற முடிகிறது. பணம் போடுபவர் சொர்ப்பனந்தானே என்று ஓரளவு சுதந்திரமாக விடுகிருர். ஆகவே தயாரிப்பாளன் கதாசிரியருடைய நல்ல கற்பனையைத் தரமாக, உயிரோட்டமுடையதாக எடுத்துக்காட்ட வாய்ப்பாக இருக்கிறது. இன்று திரைப்படம் தயாரிப்பதிலுள்ள கஷ்டங்களை உணரும்போது நாடகம் தயாரிப்பது எவ்வளவோ மேல் ஆஞலும் நாடகம் நாம் எதிர்பார்க்கும் அளவிற்குத் தரமாகப் பரந்த அளவில் முன்னேறவில்லை ஏன்? நம் நாடகத் தயாரிப்பாளர்கள் பலர் செய்யும் பெருந்தவறு சினிமாப்படம் பார்க்கும் ரசிகர்களைத் திருப்திப்படுத்தவேண்டும் என்ற தவருன நினைவில் சினிமா உத்திகளையும் பிரபல நடிகர் மாதிரி நடித்தால் புகழ் இலகுவாகக் கிட்டும். என நம்பி அவர் ஏதோவொரு படத்தில் என்னவோ பாத்திரத்திற்குச் செய்த நடிப்பை தான் ஏற்கும் முற்றிலும் புதிய பாத்திரத்திற்குள் திணிந்து பாத்திரத்தையும் பார்ப்பவர்களுக்குப் புரிய விடாமல்ச் செய்வதும் எந்தவித அனுபவமற்ற ஒரு சிலர் ஒன்று கூடிச் சில புத்தகங்களை வாசித்து விட்டோ, அன்றிப் படங்களைப் பார்த்துவிட்டோ அனுபவமுள்ள ஒரு நெறியாளரின் துணையின்றியே இயல்பாக ஆங்கிலப் படங்களில் உள்ளதுபோல் இயல்பாகப் பேசுகிறேம் என எண்ணிக்கூடி நடிப்பவர்க்கே கேட்காத அளவு பேசுவது மேடையில் நிற்கவேண்டிய ஒழுங்குமுறை அசைவுகள், காட்சிமுறை, காட்சிக்கு வேண்டிய ஒளி முதலியவற்றைக் கவனிக்காமலும் நாடகங்கள் செய்வதால் வரும் அரை குறை நிலையே நாடக வளர்ச்சிக்குத் தடைகள். இதேபோல் பட வளர்ச்சிக்குத் தடை என்னவென்ருல் முதலாவது பொருளாதாரம், ஆயிரம் ரூபாவுக்குக் குறைந்தது ஒரு நல்ல நாடகத்தைத் தயாரிக்க முடியாதென்ற உண்மைபோல் நூருயிரம் ரூபாய்க்குக் குறைந்தது ஒரு படமும் எடுக்க இயலாது என்பதும் மறுக்க முடியாத உண்மை.

ஆகவே பிரச்சனைகளும் படவுலகில் அதிகமாகவே உள்ளன ஆயிரம் ரூபாய்தானே என்று நாடகத்திற்கு முதலீடு செய்துவிட்டு குழப்பாமல் இருக்கும் முதலாளி படம் சம்பந்தப்பட்ட வரையில் அப்படி இருக்கமாட்டார். அத்தோடு பணவசதி உள்ளவர் என்று தெரிந்தவுடன் அவரைத்தேடி ஒரு கூட்டமே வந்து விடும் நல்ல நோக்குடன் வரும் அவரை சீரழித்து தயாரிப்பாளனையோ, இயக்குநரையோ அவர்கள் உறுதியாக நம்பியிருக்கும் கருப்பொருளையே சிதைத்து ஒரு கிளப் டான்சையோ, கோஷ்டி நடனத்தையோ, சண்டைக் காட்சியையோ

சம்பந்தமில்லாமல் கூடப் போடுவிக்கும்படி தூண்டி அவர் வாய் மூலம் சொல்ல வைப்பார்கள். அவரும் அப்பாவித்தனமாகத் துன்பத்தைக் காக்க வந்த சத்திய சீலர்கள் என எண்ணிவிடுவார். இதனுல் நல்ல படம் தயாரிக்க எண்ணும் இயக்குனர் ஒன்றில் படமெடுக்கும் ஆசையை விட்டுவிட வேண்டும் அல்லது தன் திறமை, புகழ், தன்னம்பிக்கை எல்லாவற்றையும் பணத்திற்காக விட்டுவிட வேண்டும்.

இங்கு நாம் நல்ல படம் எடுக்கவேண்டும் உலகெல்லாம் நமது கலை, நமது வாழ்க்கைநிலை புரியவேண்டும் கலாசாரம் பரவவேண்டும். புகழ் ஓங்கவேண்டும். என்ற எண்ணங்கள் யாருக்கேனுமிருந்தால் ஆங்கிலப் படங்களை ''செம்மீன்'' போன்ற மலையாளப் படங்களை எந்தளவு திட்டமிட்டு எடுக்கிருர்களோ அதாவது நல்ல மிக இயல்பான கதைகளை உலகில் எந்த மூலையில் வாழ்பவனும் நாம் எடுக்கும் படத்தின் மொழி புரியாதவனும் பார்த்து, புரிந்து, ரசித்து, மகிழக்கூடிய விதத்தில் பொருத்தமான நடிகைகளைப் போட்டு ஏற்ற சூழ்நிலையில் படமாக்க வேண்டும். அப்படிச் செய்தால் பணம், புகழ், என்பன நம்மை வந்தடையும்.

## நல்ல நாடகம் :

இதேபோல நல்ல நாடகம் தயாரிக்க வேண்டுமாயின் நாடகம் போடுபவர்கள் எல்லோரும் ஒரு நல்ல கதையை நாடகநெறிகள் தெரிந்த ஒரு இயக்குநர் மூலம் தெரிந்தெடுத்து பொருத்தமான நடிகர்களுடனும், வேண்டிய காட்சிகளுடனும் நல்ல ஒத்திகை நடாத்தி வந்தால் மேல் நாடுகளில் உள்ளதுபோல் திரைப்படத்தைவிட நாடகத்திற்கு மதிப்பு உண்டாகும். ஏனெனில் உயிர் உள்ள உருவங்கள் தங்கள் திறமைகளை நேரடியாகக்காட்டி மக்களை மயக்கும் பெருமை சினிமாவுக்குக் கிடையாதே? மேற்கூறிய கருத்துக்களுடன் நாடகத்தையும், சினிமாவையும் ஒப்பிடும்போது ஏற்படும் வேற்றுமைகள் நாடகத்தில் நீண்ட காட்சிகள் குறைந்த எண்ணிக்கையுடைய காட்சி அமைப்பு, மிகையான அங்க அசைவுகள் மூலம் இரசிகர்களுக்கு கதையைப் புரிய வைக்கும் பாணியும் மிக அவசியம். ஆனுல் சினிமாவிலோ குறுகிய காட்சிகள் மிகக் குறைந்த வசனம் இயல்பான அசைவுகள் மூலம் புரியவைத்து விடலாம். நாடகத்தில் நடிப்பது கஷ்டம், சினிமாவில் நடிப்பது இலகு எனச் சிலர் நினைக்கின்றனர்.

நாடகத்தில் காட்சிகள் தொகுப்பாகத் தொடராக வரும் போது நல்ல பயிற்சியுடன் பாத்திரத்தின் குண இயல்புகளையும், மாற்றங்களையும் இலகுவாக வெளிக்கொணரலாம். ஆனுல் சினிமா அப்படிப்பட்டதல்ல. உணர்ச்சிமிக்க ஒரு வசனத்தைப் பல துண்டுகளாக்கி ஒவ்வொரு துண்டும் படமாக்கி முடிந்து, ஒளி மாற்றத்துடனும் கோண மாற்றத்துடனும் அடுத்த துண்டு படமாக்கும் நேரத்தில் தொடர்பின் தொனிமாற்றம், உணர்ச்சி வேகமாற்றம் முதலியன தொடர்பற்றுத் தனித்தனியே நிற்கும். இந்தநிலை நல்ல பண்பட்ட நாடக நடிகனுக்கு ஏற்படாவிட்டாலும் பொதுவாகத் துண்டு துண்டாக உணர்ச்சிகளைப் பிரதிபலித்து முன்பு செய்ததை மறவாமல் தொடர்ந்து செய்வதற்கு நல்ல பயிற்சியும் வேண்டும். ஆகவே, சினிமாவில் நடிப்பது சுலபமான வேலையல்ல நாடகத்தில் விட்ட பிழையைத் திருத்த முடியாததுபோல் தொடர்ந்து சினிமாவில் தவறிழைத்தாலும் தயாரிப்பாளர் நடிகரை மறக்கவேண்டி வரும். நாடகம் சினிமா இரண்டிலும் இருக்கவேண்டிய ஒழுங்கு நடிகர்கள் சரி. நுண் கலைஞர்கள் சரி இயக்குனர்களுக்குக் கட்டப்பட வேண்டும். அதே போல இயக்குனரும் சுயநலமற்றவராகவும், பரந்த நோக்குடையவராகவும் இருக்கவேண்டும்.

**செல்வன் வி. ரகுபதி**
க. பொ. த. (உயர்தரம்) இறுதி.

# செயல் மூலம் கல்வி

வெறும் ஏட்டுப்படிப்பு வாழ்க்கையில் பயன்தாரது என்ற உண்மையை முதலாம் வகுப்புப் புதுமுறைக் கற்பித்தல் எமக்கு எடுத்துக் காட்டுகிறது.

மாணவர் தாமாகவே சிந்தித்துச் செயல்படுவதற்கும் தாங்கள் செய்துகற்றல், மூலம் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைத் தாங்களாகவே தங்கள் குழுக்களுக்கு எடுத்துக்காட்டுவதற்கும் ஏனைய குழுக்களின் அனுபவங்களைத் தாங்கள் பெறுவதற்கும் இப் புதுமுறை வழி காட்டுகின்றது.

குழந்தைகளின் மொழித்திறனையும் கணித எண்ணக் கருத்துக்களையும் அழகியற் தன்மைகளையும் ஆக்கத்தினையும் சூழலையும் அடிப்படையாகக் கொண்டு விருத்தி செய்வதற்கு இக்கல்வி முறை உதவுகின்றது. அழகியற் தன்மைகளை விருத்தி செய்வதற்கு இசையும் அசைவும் ஏற்ற ஒரு சாதனமாகக் கையாளப்படுகின்றது.

குழந்தைகட்கு அனுபவமுள்ள நடத்தல், பாய்தல், ஓடுதல் துள்ளுதல், முதலிய அசைவுகளை இசையுடன் இணைத்து இயக்கவைப்பதையே முதல் படியாக கருதுகிறோம்.

குழந்தையின் அசைவுகள் அவர்களது அனுபவத்தையும் எண்ணக் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

குழந்தையின் ஆக்கத்தினை விருத்தி செய்வதற்கு இசையும் அசைவும் மிக உதவுகின்றது. குழந்தைகளின் கல்வி மகிழ்ச்சிகரமானதாக அமையவேண்டும். குழந்தைகளை மகிழ்ச்சியாக்க உயர்தரமான இசைக்கருவி வேண்டும் என்பதில்லை. சாதாரண பொருட்களைக் கொண்டு செய்த கருவிகளே போதும். இப்படியான செயல்மூலம் சூழலில் கிடைக்கும். பொருட்களை ஆக்கப்பணிக்கு பயன்படுத்தவும் குழந்தைகள் தூண்டப்படுகின்றனர்.

பாடங்கள் யாவும் பழைய பாடத்திட்டங்கள்போல் தனித்தனி பாடங்களில்லாமல் ஒன்றிணைந்த பாடங்களாய்க் கற்பிக்கப்படுகின்றது. (உ + ம்) சுற்றுடல் தொடர்புடைய தொழிற்பாட்டை மையமாகவைத்து போக்குவரத்துச் சாதனங்கள் என்னும் அலகை எடுத்துக் கொண்டால் வாகனங்களின் பெயர்களைக் கூறுதல், வாகனங்களின் பெயர்கள் எழுதிய சொல்லட்டைகளை வாசித்தல் அவற்றைப் பார்த்து எழுதுதல், வாகனங்களைப் படமாக வரைதல், ஒட்டுதல் குறிப்பிட்ட சில நிமிடங்களுக்கு வாகனங்களைக் கணக்கெடுத்து அவற்றைப் படத்தாற் குறித்தல் வாகனங்களைப்பற்றிய பாட்டுக்களை மாணவர்களைக் கொண்டு இயற்றிப்பாடுதல் போன்று பாடங்கள் யாவும் ஒன்றிணைக்கப்படுவதை நாம் அறியமுடிகிறது.

பசிட்சித்து சிந்தித்துச் செயலில் ஈடுபடுவது, குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் பிற்கால வாழ்க்கைக்கு அத்திவாரக்கல் நாட்டுவதாக முடிகிறது. ஆக்கமான தொழிற்பாடுகளில் அவர்கள் காட்டும்

ஆர்வமே இதற்குச் சான்ருகும். ஒன்றிணைந்த பாடத்திட்டத்தை அமுல் நடத்தும்போது மாணவர் மாணவர் விடயங்களை அலசி ஆராயும் வாய்ப்புக் கிடைக்கிறது. இதனுல் கற்பனுச்சுதி சிந்தித்துச் செயலாற்றும் திறன் உளவிருத்தி என்பன கூடியளவு விருத்தியடைகின்றன.

குழு முயற்சியில் மாணவர் ஈடுபடுவதினுல் ஆசிரியர் மாணவர்களைப் புரிந்துகொள்வதுடன் மாணவர்களும் ஆசிரியர்களுடன் அச்சமின்றிப் பழக முடிகிறது. மாணவர்களிடையே ஒற்றுமை, அன்பு, உதவி செய்யும் மனப்பாங்கு என்பன வளர்கிறது.

கணித பாடத்திட்டமாறிவரும் விஞ்ஞான யுகத்திற்கு அரியதோர் வரப்பிரசாதமாகும். இதன் மூலம் சிறுவர்கள் விளையாட்டு முறையா எத்தனையோ அரிய பெரிய விடயங்களை அறியமுடிகிறது.

இவ்வாருன பல புதிய அனுபவங்களைப் புதுமுறைக் கற்பித்தல் மூலம் பெறக்கூடியதாயிருக்கின்றது.

செல்வி க. பூமணி
(ஆசிரியை)

---

# இலக்கியப புதிர்

=(×)=

1. "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" என்ற கூற்றை வெளிப்படுத்திய தொகை நூல் எது?
2. தமிழில் (1876ம் ஆண்டு) முதலில் வெளிவந்த நாவலின் பெயரென்ன?
3. "வண்டு தமிழ்ப் பாட்டிசைக்கும்" என்று பாடியவர் யார்?
4. "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" இதை மக்களுக்கு எடுத்துச் சொன்னவர் யார்?
5. சிறுகதை இலக்கியத்தை முதலில் தொடங்கியவர் யார்? அவர் எந் நாட்டைச் சேர்ந்தவர்?
6. மேசை, அலவாங்கு, கதிரை, எந்த மொழிச் சொற்கள் என்று கூறமுடியுமா?
7. இலக்கணங்கள் ஐந்தும் எவை?
8. "திராவிட மொழிகளின் ஒப்புமை இலக்கணம்" என்ற நூலை ஆக்கியளித்த அறிஞர் யார்?
9. இராம காதையில் இடம்பெறும் "நியாயவான்" பெயரென்ன?
10. "வேலும் வில்லும்" யாரால் இயற்றப்பட்ட நூல்?

(விடைகள் 26ம் பக்கம் பார்க்கவும்)

---

# கணக்குப் பதிவியலின் பயன்பாடு

"ஏழுதி வழங்கான் வாழ்க்கை கழுதை புரண்ட களம்" "ஆற்றிலே போட்டாலும் அறியப்போடு" என்பனபோன்ற பல முதுமொழிகள் நம்மிடையே வழங்கிவருவதை நாம் அறிவோம். இவற்றின் உட்பொருளை நாம் நோக்குமிடத்து நமது கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்துவைக்க வேண்டுமென்பது தெற்றெனப் புலப்படுகின்றது. கொடுக்கல் வாங்கல்களைச் சரியாகவும் தெளிவாகவும் விஞ்ஞான ரீதியில் பதிவு செய்து வைத்தலே கணக்குப் பதிவியல் எனப்படும்.

கணக்குப் பதிவியல் என்றவுடன் அது வியாபார நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட விடயம் என்று பலர் கருதுவது பெருவழக்காகும். ஆனால் இக்கலை வியாபாரத்திற்கு மாத்திரம் சொந்தமானதல்ல. சாதாரண மனிதனுடைய நாளாந்த வாழ்க்கையிலே இக்கலை பெரிதும் பங்கெடுக்கின்றது. பற்றாக்குறையாகக் கிடைக்கும் பொருள் வளத்தைக் கொண்டு நல்ல தரமான வாழ்க்கையை ஒருவன் வாழ விரும்புவானாயின் அவன் கட்டாயம் தனது வரவு செலவுகளை ஒழுங்காகப் பதிந்துவைக்க வேண்டும். ஒருவனது நாளாந்த வாழ்க்கையைத் திட்டமிட்டு நடாத்துவதற்குக் கணக்குப் பதிவியல் பெரிதும் உதவுகின்றது. திட்டமிட்டு வாழ்க்கை நடாத்தாவிட்டால் அவன் பல தொல்லைகளுக்கு ஆளாக நேரிடும்.

"ஆன முதலில் அதிகஞ் செலவானால்
மானமிழந்து மதிகெட்டுப் – போனதிசை
எல்லார்க்கும் கள்வனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானால் நாடு" என்ற மூதுரை கணக்கெழுதாமல் வாழ்பவர்களுடைய நிலையை நன்கு சித்தரிப்பதைக் காணலாம.

மேலும் இக்கலை இன்றைய வாழ்க்கையில் ஒவ்வொரு குடும்பப் பெண்ணுக்கும் மிக அத்தியாவசியமான தொன்றாகும். தேவைகள் அதிகம் வருவாயோ சொற்பம். கிடைக்கும் வருவாயைக் கொண்டு தேவைகளைத் தெரிவு செய்து நிறைவேற்றுபவள் தான் சிறந்த குடும்பத் தலைவியாக விளங்கமுடியும். இதைத்தான் வள்ளுவரும் "மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்..

"வளத்தக்கால் வாழ்க்கைத்துணை" எனக் கூறியுள்ளார். தற்கொண்டான் வளத்தக்க வாழ்க்கை நடாத்தக் கணக்குப் பதிவியல் அவசியமன்றோ.

சாதாரண வாழ்க்கைக்கு உதவுவதைப்போலவே இக் கலை ஏனைய தொழிற்துறைகளுக்கும் முக்கியமான ஊன்றுகோலாகக் கைகொடுத்து உதவுகின்றது. பொதுவாக வியாபார நிலையங்களில் நாளாந்தம் ஆயிரக் கணக்கான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வதால் அவர்கள் ஒழுங்கான முறையிற் கணக்கு வைக்கவேண்டிய அவசியமேற்படுகின்றது. ஒரு வியாபார நிலையம் ஒழுங்காகக் கணக்கு வைப்பதனால் வியாபார காலமுடிவில் ஏற்படக்கூடிய இலாப நட்டங்களை அறிவதுடன் குறிப்பிட்ட ஒரு திகதியில் வியாபார நிலையத்திலுள்ள சொத்துக்களையும் கொடுப்பனவுகளையும் இலகுவாக அறிந்துகொள்ள முடியும்.

மேலும் தொழில் நிலையங்கள் அரசாங்கத் திணைக்களங்கள், பணிமனைகள் முதலியவற்றிற்கும் கணக்குப் பதிவியல் அவசியமாகும்

இவை சொத்துக்களையும் கொடுப்பனவுகளையும் அறிவதற்கும், கடன் பட்டோர், கடன் கொடுத்தோர் விபரங்களைத் தெரிந்துகொள்வதற்கும் இலாப நட்டங்களை அறிவதற்கும், தொழிற்படு முதலைப் புரிந்துகொள் வதற்கும் கணக்குப் பதிவியல் துணைசெய்கின்றது. வங்கிகள் கூட்டுத் தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சமூக சேவை இயக்கங்கள் யாவும் ஒழுங்கான முறையிற் கணக்கு வைத்துள்ளன. குறிப்பாக ஒரு வங்கி யில் வாடிக்கையாளன் கேட்டவுடனேயே அவனது கணக்கைக் கொடுப் பதற்கேற்ற வகையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளதை நாமறியலாம். எனவே இக்கலை மனித சமுதாயத்துக்கே பெருந்தொண்டாற்றும் ஒரு சீரிய நற்கலையாகும்.

மேல் நாட்டார் அறிவியல் ரீதியில் வகுத்த இக் கணக்கியற் கலையானது அண்மைக்காலம் வரை ஆங்கில மொழியிலேயே போதிக் கப்பட்டு வந்தது. இதனுற் பல மாணவர்கள் இக் கலையைத் தமது தாய்மொழியிற் கற்றுத் தெளிய முடியாமற் போய்விட்டது. ஆனல் இன்று நம் ஈழநாட்டில் கணக்கியற்கலை சிங்களம் தமிழ் ஆகிய தாய் மொழிகளிலும் போதிக்கப்படுவது மிகவும் போற்றத்தக்க விடயமாகும். நமது தாய் மொழியாம் தமிழ் மொழியில் நாம் இக் கலையைக் கற்ப தற்கு வாய்ப்பை ஏற்படுத்திய பெருமை திருவாளர்கள் வேதலிங்கம் அழகேசன், தேவராஜன் கலைப்புலவர் நவரெத்தினம் முதலியோரையே சாரும்.

மேலும் பல துறைகளுக்கும் அச்சாணியாக விளங்கும் இக் கணக்கியற் கலையைக் கற்கும் மாணவருக்கு நல்ல எதிர்கால முண்டென் பதில் எட்டுணையும் ஐயமில்லை. இக் கலையைக் கற்கும் மாணவர்கட்கு நல்ல வேலை வாய்ப்புக்கள் இருப்பதுடன் சீரிய வாழ்க்கை முறையும் அமையும் எனக் கூறலாம்.

**க. கனகசிங்கம்**
தே. உ. க. (சான்றிதழ்) வர்த்தகம்.

---

# புதிருக்கான விடைகள்

1. கலித்தொகை
2. பிரதாப முதலியார் சரித்திரம்.
3. கம்பர்.
4. ஒளவையார்.
5. எட்கார் அலன்போ அமெரிக்கா.
6. போர்த்துக்கேயச் சொற்கள்.
7. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.
8. டாக்டர் காட்வெல் – Cald well.
9. விபீஷணன்.
10. ரா. பி. சேதுப்பிள்ளை.

---

# பொன் மொழிகள்

1. எல்லோரிடமும் பேசுவது நல்லது. ஆனால் எதைப் பேசுவது எப்படிப் பேசுவது எவ்வளவு நேரம் பேசுவது என்பதை நன்கு அறிந்து கொண்டு பேசவேண்டும்.

2. பிறர் அனுபவத்திலிருந்து அறிவு பெறுபவன் அறிஞன். தன் சொந்த அனுபவத்திலிருந்து அறிவு பெறுபவன் இடைநிலையான். அனுபவப்பட்டும் அறிவு பெறாதவன் மடையன்.

3. நூல்கள் இல்லாத இல்லம் பல கணிகள் இல்லாத ஓர் அறையைப் போன்றதாகும்.

4. புத்தகப் படிப்பு பரந்த உலகம் ஒன்றை நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது.

5. மனதை விழிப்பாக வைத்து ஆவலோடு தேட்டத்தோடு கருத்தோடு படிக்கிற படிப்புத்தான் சாரமானது சத்தானது இன்ப நலனும் வாழ்க்கைப் பயனும் ஒருங்கே வழங்க வல்லது. நல்ல புத்தகங்களோடு உறவு பூண்பதால் ஆயிரம் ஆயிரம் நன்மைகளுண்டு.

6. தலையைத் தாழ்த்திப் படித்த படிப்பெல்லாம் தலை நிமிர்ந்து வாழ உதவவேண்டும்.

## நல்ல நினைவுகள்

நல்ல நினைவுகள் நல்ல மனிதர்களை உருவாக்குகின்றன. நல்ல மனிதர்களால் நல்ல குடும்பங்கள் நற்குடும்பங்களால் நல்ல நாடுகள். நன்னாடுகளால் நல்ல உலகம் உருவாகும். அத்தகைய உலகம் உருவாகுவதற்கு நம் உள்ளத்தில் ஓடும் சிந்தனை அலைகள் நல்லதாக இருக்கட்டும்.

## தமிழின் தொன்மை

தோன்றிய காலம் இன்னதெனத் தோற்றாத தொன்மையுடையது தமிழ். உலகிலே முதன் முதல் தோன்றிய மக்கள் தம் உள்ளத் துணர்வினைக் கைச்செய்கையால் உரைத்த காலம் போக, மெல்ல நாவை அசைத்து பேச முற்பட்டபோது தோன்றிய மொழியே தமிழ்.

— சுவாமி விபுலானந்தர்.

தொகுப்பு:-

**செல்வி சரோஜினி பாக்கியன்**
க. பொ. த. (உயர்தரம்)
1ம் வருடம்.

## வருடத்தின் அலகு

''கார்த்திகை'' என்ற இளம் பெண் தனது வீட்டு மாடியில் தலை சீவிக்கொண்டு நின்றுளாம். வீதி வழியே ஒரு குறும்புக்கார வாலிபன் வந்தான். அவன் அவள் அணிந்திருந்த தாவணி மார்பு அருகில் கிழிந்திருப்பதைக் கண்டு உடனே ஐயோ ''மார்கிழி'' என்றான். அவளும் குறும்பில் சளைத்தவளல்ல. அவள் ஆமாம், நீதான் அதைத் ''தையேன்'' என்றாள். அவனே நான் தைத்துவிடுவேன், ஆனால் அது ''மாசு'' என்றானும்.

உடனே அவள் அந்த மாசில்தான் ''பங்குநீ'' என்றாள். அவன் உடனே மகிழ்ச்சியுடன் அவளிடம் அப்படியென்றால் நான் வரவா என்று கேட்டானும். அதற்கு உடனே அவள் அப்படியென்றால் ''வைகாசு'' என்று சொன்னாள். அவனே துணுக்குற்று அப்படியானால் ''ஆர் நீ'' (ஆனி) என்று கேட்டானும். அவளும் தயங்காமல் நான் ''ஆடி''ப் பிழைப்பவள் என்று சொன்னாளாம். அவன் இதுவரை எப்படியும் இருந்து விட்டுப் போகட்டும் இனிமேலாவது குடும்பப் பெண்ணாக ''ஆவநீ'' (ஆவணி) என்று சொன்னானும். அவள் ''புரட்டா'' (செய்கிறாய்) சீ'' போ என்றாளாம். அவன் ஏமாற்றத்துடன் ''ஐ! பசி!'' எனத் திரும்பினானும். (ஆதாரம்: 'குமுதம்')

## கற்றவன் மகிமை

பொருட் செல்வம் அழிந்து போகும். கல்விச் செல்வம் காலத்தால் அழிக்கப்படமுடியாதது. பொருளினால் மதிக்கப்படுவோன் பொருளை இழந்த பின்பு மக்களால் மதிக்கப்படுவதில்லை என்பதை நாமறிவோம். அறிவு நிரம்பப் பெற்றவன் ஏழையாக இருந்தாலும் அறிஞர் மதிப்பைப் பெற்றுப் புகழ் பெறுவான். இத்தகைய புகழுக்கு இறப்பேயில்லை.

## தெரிய வராத செய்தி

இன்றைய உலக மொழிகளில் தமக்கெனத் தனியாகத் தாமே எழுத்து வகுத்துக்கொண்ட மொழிகள் தமிழும் தமிழின மொழிகளும் மட்டுமே. இது இன்றைய உலகப் பொதுமக்களுக்குத் தெரிய வராத செய்தி. மாணவருலகும் அறிஞரும் கூடக் கவனியா மெய்மை ஆகும். ஆயினும் இது வரலாறு காட்டும் உண்மை.

— பன்மொழிப்புலவர் திரு. கா. அப்பாத்துரை (எம். ஏ. எல். டீ.)

தொகுப்பு: -

**செல்வி சித்திரா சிவனேசராசா**

க. பொ. த. (உயர்தரம்)

---

''சாதி மத வேறுபாடின்றியும், அரசியற் கட்சிப் பிரிவினையின்றியும் செய்தற்குரிய தொண்டு தமிழ்த் தொண்டு''

''மனம் எப்பொருளை இடைவிடாது சிந்திக்கிறதோ அப்பொருளைப் போலாகிறது வாழ்வு''

— சுவாமி விபுலானந்தர்.

---

# உள்ளத்தில் இருந்த தெள்ளிய கருத்துக்கள்

1. கேவலமான முறைகளில் சுலபமாகப் பெறுகின்ற நன்மைகளைவிட நியாயமான வழிகளில் கஷ்டப்பட்டுப் போராடிக் கிடைக்கின்ற நன்மைகளுக்கு ஆயுசும் மதிப்பும் அதிகம்.

2. ஒருவருடைய பெருமை அவருடைய பணம், பதவி, அந்தஸ்து என்பவற்றைப் பொறுத்ததல்ல. அவருடைய குணத்தையும், நடத்தையையுமே பொறுத்தது.

3. பிறர் எம்மைப் புகழும் புகழ்ச்சி பூவைப் போன்றது. நாம் அதன் வாசனையைப் பிடிக்கலாம். ஆனால் அதை அப்படியே விழுங்கி விடக் கூடாது.

4. வாழ்க்கையில் சிக்கல்கள் எதிர்ப்படும்போது ஒதுக்கிச் செல்வதோ அக்கறையற்ற வாழ்க்கை. ஒதுங்கிச் செல்வதோ அச்சம் நிறைந்த வாழ்க்கை. இரண்டுமே பயனற்றவை.

5. புரிந்து கொள்ளாதபோதும் பொறுமைப்படுகின்றபோதும் மனிதர்கள் மற்றவர்களைப் பற்றி மட்டமாகத்தான் நினைக்கிறார்கள்.

6. ஒரு பெண்ணுக்கு அடக்கமே சிறந்த அணிகலன். தெய்வீக உருவின் திருவடிகளில் சமர்ப்பிக்கப்படும்போதுதான் ஒரு மலர் தன்னைப் பாக்கியசாலியாகக் கருதுகிறது. இல்லாவிட்டால் அம்மலர் செடியிலே வாடிவிடுவது சாலச்சிறந்தது.

7. கோபுரம் கோபுரமாக இருக்கின்றது என்பதனுற்றான் பெருமையேயொழிய அதன் நிழல் நீண்டிருக்கின்றது என்பதால் அல்ல. உண்மையாக வாழ்வதும் அப்படித்தான்.

8. எண்ணற்ற நன்மைகளை நாம் செய்திருந்தாலும் அறியாமற் செய்யும் ஒரு சிறு தவறால் அத்தனை நற்பெயரும் மறைந்துவிடும்.

9. புகழ் மொழியை நச்சி அடிமையாதலும் பழமொழியை நம்பிப் பகை கொள்ளலும் நாம் வழுக்கி விழுகின்ற படுகுழிகள்.

10. தாழ்ந்திருக்கும்போது விலகியிருந்து உயர்ந்திருக்கும் சமயத்தில் உறவாடவருவது சந்தர்ப்பவாதிகளின் சாகசம்.

தொகுப்பு:- **கண்ணன்.**

# கதையுள்ளம்

## கொம்புத்தேன்

=(×)=

முதலாம் முறை நாப்பத்தஞ்சு
இரண்டாம் முறை நாப்பத்தஞ்சு
நாப்பத்தொன்பது ரூபாய் கேட்கிறேன்
முதலாம் முறை நாப்பத்தொன்பது
இரண்டாம் முறை நாப்பத்தொன்பது
மூன்றாம் முறை நாற்பத்தொன்பது
எலை மரியாத்தை இந்தத் தோணியையும் கூறிவிடு.

பட்டணத்தில் இருந்து இரண்டு மைல் தூரத்தில் அமைந்துள்ளது கொம்மான்துறை என்னும் அந்தச் சிறிய மீன்பிடித் துறை அந்தத் துறையின் கரையோரம் ஒவ்வொரு நாளும் காலை ஆறு மணி தொடக்கம் பகல் பத்து மணி வரை ஒரே அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருக்கும் ''உந்த நாறலுக்கு என்ன நெருப்புவிலை சொல்லுறாய்'' இஞ்சே வேணுமெண்டாப் பிடியும் இல்லாட்டி விட்டுட்டுப் போட்டு நடவும், போன்ற பேரம் பேசும் குரல்கள் எழுப்பும், ஒலிகளும் மரியாத்தை போன்றோரின் ஏலம் கூறும் ஒலிகளும் கடலலை எழுப்பும் சல சல என்ற ஓசையுடன் சங்கமிப்பதையும் காகங்கள் காசு கொடுக்காமல் கரையில் கிடக்கும் மீன்களைப் பங்குபோடும் காட்சியும் அங்கு காணப் படும் கூரையில்லாத மடத்தைச் சுற்றி, கரியலில் மீன் பறிகளையும், பெட்டிகளையும் தாங்கிக்கொண்டு நிற்கும் சைக்கிள்கள் அடிக்கடி கடற் கரைக்கு வந்து உப்புக் காற்றைச் சுவாசித்தற்குச் சாட்சியாக கறள் கட்டிய நிலையில் காணப்பட்டன. இத்தனைக்கும் காரணம் சூரியன் மேற்கே சென்றவுடன் கொம்மான்துறையைவிட்டு நீங்கி ஆழ்கடல் சென்று உழுதுவிட்டு பின் திரும்பி வரும்போது சூரியனை அழைத்து வரும் தோணிகள் தான்.

சுமார் ஐந்தேகாலடி எலும்புக் கூடு ஒன்று சதைகளால் பெண் உருவம் பெற்றுச் சற்றுக் கறுத்த மினு மினுப்பான தோழால் போர்க்கப்பட்டு இருக்கின்றது. அதன் தலையில் உள்ள சுருண்ட நீண்ட இருண்ட கேசம் பிடரியில் இருந்து இரண்டு அங்குலம் மேல் கொண்டை யாகக் கட்டப்பட்டிருக்கும் அதன் தாடை எலும்புகளில் பொருத்தப் பட்டுள்ள சிறிய வரிசையான பற்கள் வெற்றிலைப் பாக்குச் சுண்ணும் பால் உண்டாக்கப்படும் சிவப்புச் சாயத்தால் நிரந்தரமாகப் பூசப்பட் டிருக்கும். சூ..... மரியாத்தைக்கு வெற்றிலை போடப் பழக்கியது சூசையப்பன் தான்.

தோணிக்காரருக் கெல்லாம் மரியத்தைக் கைராசிக்காரி, அதிஷ்டக்காரி, ஆனால் மரியாத்தையிடம் உள்ள கைராசியும் அதிஷ்டமும் அவளுடைய சொந்த வாழ்க்கையில் கைகொடுக்கமாட்டோம் என்கின்றன போலும் ஜேசுதாசன் பிறந்ததால் பெற்ற இன்பம் ஆறுத போது ஆறுவது மாதம் ஆட்கொண்டவனை ஆழ்கடல் கொண்டுபோக விட்டாள். எட்டுச் செலவுடன் சுற்றத்தார் விலக மரியாத்தை தன் இரைப்பையையும் தன் கருப்பையில் இருந்து வந்த இரைப்பையையும் நிரப்ப இந்த முதலில்லாத வியாபாரத்தை ஆரம்பித்தாள்.

ஆரம்பத்தில் கொம்மான்துறையின் வழமையான ஏலக்காரி பொன்னம்மாக்காவின் திட்டுக்கு இலக்கானாள். மரியாத்தை பின் ''தேப்பனைத்திண்ட பெடியோடை தனிப்பாடு படுகிறாள் பாவம் மரியாத்தை'' என்று பெருந்தன்மையாக விட்டுக்கொடுத்தாள் பொன்னம்மாக்கா. அத்துடன் மரியாத்தையின் கைராசியும் வலைஞரைக் கவர்ந்திருக்க வேண்டும்.

ஒரு தோணிக்கு இருபத்தைந்து சதம் சிலவேளை ஐம்பது சதம். மீன் கொள்வனவு செய்தோருக்கு இரண்டு மீன் நட்டம். இவை தான் மரியாத்தையின் கைராசி வெறும் வேதனம். யேசுதாசன் ம். மா... சொல்லி அம்மா சொல்லி ஆறு வயதுப் பாலகனானான். அன்று காலை ''ஸ்ரீ ராமலிங்கம் வித்தியாசாலை தமிழ்க் கலவன் பாடசாலை'' இன் சட்டம்பியாரை துறையடியில் கண்ட மரியாத்தை துடிக்கத் துடிக்க நான்கு விளல்மீன்களைக் கொடுத்து ''சட்டம்பி ஐயா நான் என்ர புருஷனைக் கடலுக்குக் குடுத்துப் போட்டேன். என்ர மோனை என்றாலும் பேப்பர் சுற்றும் இந்த நாசமாய்ப்போன தொழிலைச் செய்யாமல் இருக்கப்பண்ணி படிப்பிக்க வேண்டுமென்ற ஆசையாய்க் கிடக்கு. தயவு செய்து தத்தைப் பூசத்திற்கு அவனுக்கு ஏட்டைத் தொடங்கி பள்ளியிலை சேர்த்து விடுங்கோ. ஐயா என்று தன் உள்ளத் துடிப்பைக் கொட்டினாள். ''சரி, சரி பார்ப்பம்'' என்று கூறிச் சென்ற சட்டம்பியார் செயலிலும் இறங்கியதால் பாலகன் யேசுதாசன் பள்ளிச் சிறுவனானான். சூரியனுக்கும் பூமியைச் சுற்றிவந்தான் யேசுதாசன் பத்தாம் வகுப்பை அடைந்துவிட்டான். குணபால் யேசுதாசனின் வகுப்பு நண்பன், இஞ்சினியர் ஜெயபாலனின் அன்பு மகன் வகுப்பில் நல்ல கெட்டிக்காரன் கற்கும் பாடங்களை இலகுவில் விளங்கிக் கொள்ளும் ஆற்றலும் விவேகமும் குணபாலனிடம் சிறந்து காணப்பட்டன. எனினும் குணபால் தனக்கு ஏற்படும் சில சந்தேகங்களை யேசுதாசனிடம் கலந்துரையாடுவதன் மூலம் தீர்த்துக்கொள்வான்.

குணபால் முதலாவது தடவையிலேயே சோதனையில் சித்தி அடைந்து விட்டான். யேசுதாசனுக்கு முதலாவது தடவையும் இரண்டு பாடங்களில் விசேட சித்தி, ஏனைய பாடங்களுக்குப் பரீட்சைக்குச் சமூகம் அளிக்கவில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. மலேரியா நடுக்கல் யேசுதாசனுக்கு இந்தத் துக்கரமான முடிவைக்கொடுத்தது. இந்த ஆறு மாத காலத்தில் கொம்மான்துறையில் எத்தனை மாற்றங்கள் ஒன்றரை அடி அகலம் பதினாலு அடி நீளமான தோணிகள் நின்ற இடத்தில் மூன்றடி அகலம் இருபத்தெட்டடி நீளமான இயந்திரம் பூட்டப்பட்ட வள்ளங்கள் நீலம், சிவப்பு, வெள்ளை போன்ற வர்ணங்களைத் தம்மேல் பூசி கொம்மான்துறைக் கரையை அழகுபடுத்திக் கொண்டிருந்தன. முன்னர் கூரையில்லாது காட்சி அளித்த அந்த மரம் இப்போது குளிர்சாதன அறைகளைக்கொண்ட புதிய கட்டிடமாக மிளிர்கின்றது. அக் கட்டிடத்தின் முற்பக்கத்தில் தராசுகள் தொங்கிக் கொண்டிருந்தன. இவற்றைவிட இருபது ஒரே மாதிரியான வீடுகள் கொம்மான்துறையின் கல் வீடுகளாகக் காட்சி அளித்தன.

அன்று கொம்மான்துறை வாழை மரங்கள் மாவிலைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு மீன்பிடி அமைச்சரின் வருகைக்காகக் காத்திருந்தது. அமைச்சரும் வந்து கட்டிடங்களைத் திறந்து வைத்தும் வள்ளங்களின் இயந்திரங்களை முடுக்கிவிட்டும் தராசுப்படியை வைத்தும் கொம்மான்துறையில் மீன்பிடித் தொழில் கூட்டுறவு முறையைப் புகுத்தி வைத்தார். கொம்மான்துறை மீனவர்கள் எல்லோர்க்கும் நன்மையான காரியங்களைச் செய்துவிட்ட பெருமிதத்தில் திரும்பிச் சென்று கொண்டிருந்தார் ஆனால் அவர் மரியாத்தையின் உழைப்புக்கு உலைவைத்து விட்டுச் செல்கிறார் என்பதை உணர்வாரா. கூட்டுறவு முறையில் மீன் நிறுத்தலை நியாயமான விலையில் வாங்கப்பட்டதால் கொம்மான்துறை மீனவர்க்கு மரியாத்தையின் சேவை வேண்டாமல் போயிற்று.

தாயின் முதலில்லாத் தொழில் அரசாங்கத்தின் ஐந்தாண்டுத் திட்டத்தால் பறிபோனதால் தாயையும் தன்னையும் தானே தாங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகி இருப்பதை யேசுதாசன் உணர்ந்தான். தாய் எவ்வளவோ மறுத்துரைத்தும் தன் படிப்பைத் துறந்தான். "அம்மா முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதும் எங்களைப் போன்றோர் பட்டம் பதவிக்கு ஆசைப்படுவதும் ஒரே மாதிரித்தான். இப்படியான ஆசைகளால் எமக்கு இன்பமே ஒழிய அவற்றை நிறைவேற்றிக்கொள்ள முடியாது. ஆனபடியால் என்ர பரம்பரைத் தொழிலைச் செய்து திருத்தப்படுவோம் அம்மா. அறிவுக்குப் படிச்சுப்போட்டேன்தானே என்றும் மரியாத்தையைத் தேற்றின.

கரவலையை இழந்துவிட்டுக் களைத்துப்போய் அமர்ந்து இருந்த யேசுதாசன் தெருவில் சென்ற காரை நோக்கினான். அதில் வருங்கால இஞ்சினியர் குணபாலன் போவதைக்கண்டு அவனது உள்ளம் எதற்காகவோ ஏங்கியது.

ச. ஸ்ரீஸ்கந்தா
*12 – கலை.*

---

# உயரத்திலிருப்பவன்

## [ உருவகக்கதை ]

அவனொரு பிரபல எழுத்தாளன். எழுத்தாளன் என்பதை விட அவனொரு விமர்சகன் என்பதே பொருத்தம். அவனது விமர்சனத்திற்குட்படாத பெரிய புள்ளிகளே கிடையாது எனலாம். இன்றும் வழமைபோல் யாரையோ ஒரு கலக்குக் கலக்குவதற்காக அவனது எழுதும் மேசையருகே வந்தமர்கிறான். அவன் முன்னே கண் சிமிட்டிக் கொண்டிருக்கும் இன்று காலை மலர்ந்த மல்லிகைப் பூக்களைப் போன்ற கள்ளங்கபடமற்ற வெண் காகிதங்களை அவனது கரங்கள் இடமிருந்து வலமாக மேலிருந்து கீழாக முத்தமிடத் தொடங்கவிட்டன. ஆமாம் அவன் எழுதத் தொடங்கிவிட்டான். ஆனால் இன்று மட்டும் ஏனோ அவனால் எழுத நினைத்ததை எழுதமுடியவில்லை. இதனால் ஒன்றுமரியாத வெண் காகிதங்களில் ஒன்று அவனது ஐந்து விரல்களுக்குள்ளும் சிக்குண்டு, மடிந்து, கசங்கி கவனிப்பாரற்று, அந்த மேசையின் ஒரு மூலையில் போய் விழுகின்றது. ஒரு காமுகனின் கையிற் சிக்குண்டு கசக்கி எறியப்பட்ட ஒரு மலரைப்போல் சோகமே உருவாகக் கிடக்கும். அந்த வெண் காகிதத்தை அவனது பேனாவின் கண்கள் ஒரு ஏளனப் பார்வையுடன் நோக்குகின்றன. பாவம் அந்த வெண்காகிதமோ வெட்கித் தலை குனிந்து அப்படியே பேசா மடந்தையாக கிடக்கிறது.

''என்ன நண்பரே வெட்கமா இருக்கிறதா? என்ன செய்வது. இதுதான் உங்கள் விதி'' என்று மெதுவாக ஆனால் குத்தலாக அவனுடைய பேனா பேச்சை ஆரம்பிக்கிறது. இருந்தும் காகிதம் பேனாவின் பேச்சைக் கேளாததுபோல் மௌனவிரதம் மேற்கொண்ட முன்வரைப்போல் ஊமையாக இருந்தது. காகிதத்தின் இம் மௌனம் பேனாவை மேலும் மேலும் பேசத் தூண்டியது. ''என்ன நண்பரே பேசமுடியவில்லையா? அப்படித்தான் உன் சக நண்பர்களையெல்லாம் இவன் இவ்வாறுதான் குப்பைத் தொட்டிக்கோ அல்லது பத்திரிகைக் காரியாலயத்திற்கோ அனுப்புவான். பத்திரிகைக்காரர்களும் கடைசியில் உன் இனத்தை குப்பைத் தொட்டிக்குள்தான் போடுவார்கள். ஆனால் நான் அப்படியில்லை. எத்தனையோ வருடமாக இந்த விமர்சகனின் கையில் தங்கப் பதுமைபோல் தவழ்கிறேன் தெரியுமா? எத்தனையோ காகிதங்களை என் உதவியினால் நிரப்பிக் களித்துவிட்டான் இவ் விமர்சகன். ஆனால் என்னைமட்டும் இவன் இன்னும் கழிக்கவில்லை. கழிக்கப் போவதுமில்லை ஏனென்றால் நான்தான் இவனின் உயிர்மூச்சு இதிலிருந்தாவது நான் உன்னைவிட ஓராயிரம் மடங்கு உயரத்திலிருப்பவனென்று புரியவில்லையா? என்று மமதையுடன் பேசிவிட்டு காகிதத்தைக் கர்வத்துடன் பார்த்தது. அந்தப்பேனை இத்தனைக்குப் பின்னும் காகிதம் ஊமையாக இருக்க விரும்பவில்லை. பேசியது நண்பா நான் சொல்லி உனக்குப் புரியாது. அனுபவவாயிலாகத்தான் உன்னை நீ உணர்வாய். உலகில் எல்லாம் நிலையற்றது என்பதை நீ ஒரு நாள் உணரத்தான் போகிறாய்'' என்று கூறிப் பெருமூச்சுவிட்டது.

எழுத்தாளனோ. எழுத நினைத்ததை எழுதமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் அவனது முகத்தில் புன்னகையின் கீறல்கள் மின்னி மறைகிறது. பேனாவை எடுத்து எழுதுகிறான். பேனா எழுத மறுக்கிறது பேனாவை உதறுகிறான். பேனாவினில் இருந்த மைமுழுவதும் மேசையின்மேல் சிதறுகிறது. அதையும் பொருட்படுத்தாமல் நினைத்ததை எழுதிவிட வேண்டுமென்ற துடிப்புடன் எழுதுகிறான். பேனா மீண்டும் எழுத மறுக்கிறது. கோபத்தோடு பேனாவை அந்த மேசையின் மேல் குத்துகிறான். பேனா இரண்டாக உடைந்து அந்த வெண்காகிதத்தின் அருகினிற்போய் விழுகிறது. இதுவரை சோகமே உருவாகக் கிடந்த அந்தக் காகிதம் தலை நிமிர்ந்து ஒரு புன்னகையை உதிர்க்கிறது.

என்ன நண்பரே! சற்று முன்னர் பிரமாதமாக அளந்து கொட்டினீரே, இப்போ ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்? எனக்கிருந்த மதிப்புக்கூட உனக்கில்லையே! என்று கூறிவிட்டு சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு மீண்டும் தொடர்கிறது நாம் எல்லாம் ஒரே இனந்தான் நாம் இருந்துவிட்டுப் போவதோ சிறிது காலம். அதுவும் நமக்காக அல்ல. பிறருக்காகத்தான். மெழுகுவர்த்தி தன்னையே உருக்கிப் பிறருக்காக ஒளியைக் கொடுக்கிறது. இதனால் மெழுகுவர்த்திக்கு என்ன பயன்? ஒன்றுமேயில்லை, இதேபோல்தான் நாமும் எவ்வளவோ உதவியைச் செய்கிறோம். இதனால் நாமடைந்த பயன்தான் என்ன! ஒன்றுமில்லை. '' ஆற்றங்கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றோ''? என்பதை நீ ஏனோ உணரவில்லை. நண்பரே! இன்று நான் சொல்லப்போவதை ஒரு நாளும் மறந்துவிடாதே என்று அமைதியாகக் கூறிய அந்தக் காகிதம் உயரத்திலிருப்பவன் துயரத்திலிருப்பவன் என்று உரத்துக் கூறியது பாவம் முன்னர் தலைக்கனத்துடன் தன்னை உணராது பிதற்றிக்கொண்டிருந்த அந்தப்பேனா. தலை நிமிரவும் முடியாமல் அந்தக் காகிதத்தை நிமிர்ந்து பார்க்கவும் முடியாமல் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டிருந்தது அந்தப் பேனா.

**அப்துல் கப்பார்**
க. பொ. த. (உயர்தரம்) கலை ஆரம்பம்.

# என்றும் இருள்

=(×)=

வானம் இருண்டது. மழை பெய்வதற்கு அறிகுறி தென்பட்டவுடன் பாமா வேலியில் காயவிட்ட தன் பாடசாலை உடையை எடுத்து வீட்டிற்குள் கொண்டு போட்டாள். வீட்டுக் கூரைக்குள் ஒட்டை தெரிந்ததினுல் ஒழுகுமோ எனப் பயந்தாள். பின் அவளது பாடசாலைப் புத்தகங்களை ஒரு பைக்குள் போட்டுக் கட்டி வைத்து விட்டு படிப்பதற்காக உயிரியல் கொப்பியை எடுத்துக்கொண்டு விருந்தையில் அமர்ந்தாள். அந்நேரம் அவளது சிறியதாய் ''என்னடி புதினமான படிப்புப் படிக்கிருய், மற்றப் பிள்ளைகள் வீட்டு வேலை செய்யாமலா படிக்குதுகள், கெதியாய் சமைத்து வைத்து இருந்து படிடீ'' என்று வெடுக்கென்று பேசிவிட்டு நான் ரவுனுக்குப் போய்விட்டு வாறேன். வீட்டைக் கவனமாய்ப் பார்த்துக்கொள்ளடி என்று கூறி விட்டு நடந்தாள்.

பாமா தன் நிலையை எண்ணி வருந்திளுள். கடலில் ஆழத்தை அளந்தாலும் அவளின் சிந்தனையின் ஆழத்தை அளந்துவிட முடியாது. அவளின் சிந்தனை கடந்த கால வாழ்வை நோக்கித் தாவியது. பாமாவின் தந்தையும், தாயும் பாமாவை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பாராட்டிச் சீராட்டி வளர்த்து வந்தனர். ஆனல் விதி எப்படியோ பாமாவை வாழவிடவில்லை. ஒரு நாள் தாயும் தந்தையும் பாமாவை தமது தாயாருடன் விட்டுவிட்டு கோயிலுக்குச் சென்றுவிட்டனர். திரும்பி வரும் வழியில் கார் விபத்தில் சிக்கி இருவரும் இறந்துவிட்டனர். பாமா அநாதையானுள்.

எல்லோரும் ஒன்று சேர்ந்து பாமாவை அவளின் சிறிய தாயிடம் ஒப்படைத்ததால் மன விருப்பம் இன்றி ஏற்றுக்கொண்டாள். அந்நேரம் பாமாவிற்கு வயது பத்து. பாமா தொடர்ந்து படித்தாள். பாமா படிப்பில் திறமையானவளாக இருந்தாள். ஆனல் பாமாவின் சிறிய தாயின் ஒரே மகளான சீதா படிப்பில் கவனம் செலுத்துவதே கிடையாது. இது பாமாவின் சிறிய தாயான இலட்சுமிக்கு எரிச்சலைக் கொடுத்தது. வீட்டில் சீதா வேலை செய்வதே கிடையாது. ஆனல் பாமா எல்லா வேலைகளையும் கவனிப்பதுடன் படிப்பிலும்கூட கவனம் செலுத்திளுள்.

ஒரு நாள் பாமா சமைத்துக்கொண்டிருந்தாள். பக்கத்தில் சீதா அமர்ந்திருந்தாள். திடீரென்று சீதா ஏதோ எண்ணம் வந்தவளாய் பாமாவிடம் ''பாமா உனக்கு அப்பா அம்மா இல்லையாடி'' என்று கேட்டாள். பாமா சீதாவை முறைத்துப் பார்த்து ''ஏண்டி உனக்கேன் இதைப்பற்றி அக்கறை'' என்று கேட்டுவிட்டு தன் சமையலில் ஈடுபட்டாள். சீதா ஆவேசம் கொண்டவளாக ''நீ தாய், தகப்பன் வளர்த்த படியால்தான் உனக்கு இவ்வளவு திமிர், எனக்குப் பேசிற அளவுக்கு வந்துவிட்டாயாடி'' என்று கேட்டாள். அதற்குப் பாமா ''நீ பெரிய ஆளோ உனக்குப் பயந்து நடக்க'' என்று கூறும் போது இலட்சுமி அங்கு வந்தாள். ''ஏண்டி பாமா ஏன் சீதாவைத் திட்டுகிருய்'' என்று கேட்டாள். அதற்குப் பாமா ''நான் இப்ப திட்டுறஞ? அவ எனக்குப் பேசிஞ, நான் அதற்குப் பதில் சொன்னேன், இது குற்றமோ'' என்று கேட்டாள். பின் இலட்சுமி மகளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு பாமாவை அடித்தாள். பாமா அடி

பொறுக்கமுடியாமல் மயக்கமுற்ருள். இலட்சுமி திரும்பவும் பாமாவை நெருப்பினுல் சுட்டாள். பாமா மயக்கமுற்றபடியால் அதற்கும் அசைய வில்லை. இலட்சுமி பயந்தாள். அவளின் நெஞ்சு படபடத்து அடித்துக் கொண்டது. அக்கம்பக்கத்தாரிடம் பாமா மயக்கமுற்று விழுந்ததாகக் கூறினுள். சில மணி நேரத்தின் பின் பாமா எழுந்தாள். அன்று அவளால் ஒரு வேலையும் செய்ய முடியவில்லை. தன் பெற்றேரை நினைத்து அழுதாள். அவ்வளவுதான் அவளால் செய்யக்கூடியதாய் இருந்தது.

பின் திரும்பவும் சமையல் வேலையைக் கவனிக்கத் தொடங்கினுள். நாட்கள் நகர்ந்தன. பாமாவின் மனத்திலே ஏதோ ஒரு எண்ணம் தலைதூக்கியது. அது அவளுக்கே புரியாததாக இருந்தது. பாமா படிப்பைத் தொடர்ந்து படிக்க எண்ணினுள். சீதாவின் தாயின் கண் முன் தானெரு உத்தியோகம் பார்க்கவேண்டுமென்று உறுதிபூண்டாள். பின் தன் சுயநினைவிற்கு வந்தாள். அப்பொழுதுதான் சமைக்கவில்லையே என்று எண்ணம் வந்தது. எழுந்து வீட்டிற்குள் சென்ருள். அவளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள அறை முழுவதும் வெள்ளம் நின்றது. மற்ற அறைகள் எல்லாம் சுத்தமாக இருந்தது. பொருட்களை அடுக்கி வைத்து நீரை வெளியேற்றினுள். அதே கணமே இலட்சுமி வீட்டிற்கு வந்தாள்.

இலட்சுமி பாமாவிடம் ''கெதியாய் சாப்பாட்டைக் கொண்டுவா'' என்ருள். பாமா வெடுக்கென ''சமைக்கவில்லை, பொறுங்கோ சமைத்துத் தாறேன்'' என்ருள். அதற்கு இலட்சுமி ''என்னடி விசர்க்கதை கதைக்கிருய், இவ்வளவு நேரமும் எங்கே போனுய்'' எனக் கேட்டாள். அதற்கு பாமா ''உங்கள் மகளை இன்று சமைக்கச் சொன்னேன், ஏலா என்ருள், நான் வீட்டை ஒதுங்கப் படுத்திவிட்டு வேண்டுமென்ருச் சமைத்துத் தாறேன், இல்லாட்டா நீங்க சமையுங்கோ'' என்ருள். இலட்சுமியின் கண்களில் வெகுளி கொப்பளித்தது.

''பாமா இன்னும் ஒரு தடவை சொல்கிறேன், என்னையோ என் மகளையோ எதிர்த்துப் பேசினுல் உன்னை உயிரோடு விடமாட்டேன்'' என்ருள், கோபம் கொப்பளிக்க. பாமா சிரித்தாள். அது வெண்கலப் பொருட்கள் ஒன்ருேடொன்று சேர்ந்தால்போல் இருந்தது. ''என்னடி சிரிப்பு .. என்னடி சிரிப்பு'' என்று கேட்டு மாறி மாறி இரு கைகளாலும் பாமாவின் கன்னத்தைப் பதம் பார்த்தாள். கன்னம் சிவந்தது. அவள் இலட்சுமியை வெறிக்கப் பார்த்தாள். திரும்பவும் அவளது அறைக்குள் சென்று உடைகளை மாற்றிக்கொண்டு வெளியே சென்ருள். இலட்சுமி ''பாமா'' என்று அதட்டினுள். ''மாட்டுக்கு அடிச்ச மாதிரி அடிச்சுப்போட்டு பாமா என்று ஒரு மாதிரி, என் தாய் தந்தையர் இருந்தால் என் வீட்டுக்குப் பிச்சைக்கு வந்திருப்பாய்'' என்று வெடுக்கெனச் சொல்லிவிட்டு கால்போன பக்கம் சென்ருள். அப்பொழுதுதான் இலட்சுமியின் உள்ளத்தில் வெளிவந்த இரக்க உணர்ச்சி ''பாமா'' எனக் கதறவைத்தது. பாமா ஒரு முடிவிற்கு வந்தவளாய் வீட்டை விட்டு வெளியேறினுள். அவளது அழிந்த வாழ்க்கை அந்தகாரமாகக் கழிந்தது. ஆனுல் அவளின் வாழ்வு என்றுமே இருள்தான்.

செல்வி பா. இராசலெட்சுமி
தே. உ. க. (சான்றிதழ்) மனையியல்
இரண்டாம் வருடம்.

வணக்கம் !

சைக்கிள் உதிரிப்பாகங்கள்,

அன்பளிப்பு உபகரணங்கள்,

சில்லறைச் சாமான்கள்

அத்தனைக்கும்

ஒரே ஸ்தாபனம்

**கிரிதரன் ஸ்டோர்**

பிரதான வீதி,

**களுவாஞ்சிக்குடி.**

உரிமை:

க. மாணிக்கவாசகம்.



வாருங்கள் !

தங்கள் வரவு நல்வரவாகுக !!

**பலசரக்குவகைகளை**

✻ புதியனவாக

✻ பழுதற்றவையாக

✻ நிதான விலையில்

பெற விரும்புகிறீர்களா?

எவ்விதமான

பலசரக்கு வகைகளுக்கும்,

சினிமாப் பாட்டுப்

புத்தகங்களுக்கும்

எம்மிடம்

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

**இலட்சுமி ஸ்ரோர்ஸ்**

உரிமையாளர்:

சு. நவரெத்தினம்.

பிரதான வீதி,

**தம்பிலுவில் 1ம் பிரிவு.**



இவ்விதழைப் பிரசுரித்து வெளியிட

அன்பளிப்பு நல்கிய

திருவாளர்கள் :

மாணிக்கராஸ்
ஞானம்மல்
கு. உமாபதி
T. இராசரெத்தினம்
Dr. P. சிவாஜி
M. S. ஹ்யூப் (மருதமுனை)
S. அற்புதராஜன்
ஜே. நேசராசா
சி. கானிதாஸ்
து. பாலேந்திரா
பொ. பேரின்பராசா
ச. சேனாதிராசா
ச. சந்திரலிங்கம்
M. N. M. வாபீர்

ஆகியோருக்கும்

விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தக நிறுவனங்களுக்கும்

**எங்கள் மனமார்ந்த நன்றியைத்**

தெரிவித்துக்கொள்கிறோம்.

மாணவர்களே! ஆசிரியர்களே!

முருகன் ஸ்ரோர்ஸ்

உங்களுக்குத் தேவையான

❖ புத்தகங்கள்

❖ உபகரணங்கள்

முதலானவை
சகாய விலையில்
பெற்றுக்கொள்ளத்

தகுந்த இடம்

## முருகன் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி,
களுவாஞ்சிகுடி.

நங்கையரே!

K. M. S. நகை மாளிகை

உங்களுக்குத் தேவையான

நகைகளை

ஆடருக்குச் செய்து கொடுக்கவோ

நகைகளை விற்கவோ

நம்பிக்கையான

ஓர் ஸ்தாபனம்

## K. M. S. நகை மாளிகை

களுவாஞ்சிகுடி.

அம்பாள் ஸ்ரோர்ஸ்

உங்கள் தேவையே
எங்கள் சேவை!

சுகமான புகையின்பம் பெற
சுவையான சுருட்டுக்கள்
சி. ந. செல்வராசா
ந. சி. தவலோசன்
சுருட்டுக்களே!

திறமான புகையிலை
சாய்ப்புச் சாமான்கள்
நிதான விலையிற்
பெற்றுக்கொள்ள
எம்மை நாடுங்கள்

## அம்பாள் ஸ்ரோர்ஸ்

களுவாஞ்சிகுடி.

அன்பர்களே! ஆதரவாளர்களே!
அனைவர்க்கும்
ஓர் நற்செய்தி

உங்கள்
✲ றேடியோ
✲ கெசற்
மற்றும்
மின்சார உபகரணங்கள்
முதலியவற்றை
சிறந்த முறையிலும்
உத்தரவாதத்துடனும்
திருத்திக்கொள்வதற்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்

## ராஜன் றேடியோ எலக்ற்ரோன்ஸ்

பஸ் நிலையம்,
களுவாஞ்சிகுடி.

**உங்கள் தேவைக்கு!**

மலிவான விலையில்
திறம் சுருட்டு, புகையிலை
மற்றும்
கூறைச் சேலைகள் ஜவுளி வகைகள்
துவிச்சக்கர வண்டி
உதிரிப்பாகங்கள்
எங்களிடம் கிடைக்கும்.

## ஸ்ரீ குமரன் ஸ்ரோர்ஸ்
அன்ட்
## தயாநிதி ஜவுளிக் கடை

பட்டிருப்பு,
களுவாஞ்சிகுடி.

---

ரெடிமட் ஆடைகள்
பைசிக்கிளும் அதன் உபகரணம்
வானொலிப் பெட்டிகள்
பரிசுப் பொருட்கள்
மற்றும்
பலசரக்குகள்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
மிக மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

## M. M. E. அன்ட்
## சகோதரர்கள்

பட்டிருப்பு,
களுவாஞ்சிகுடி.

---

**பாவனையாளர்களே!**

உங்கள் பிரச்சனை

தரமான மலிவான

- பலசரக்கு வகை
- மட்பாண்டப் பொருட்கள்
- உபகரணங்கள்

மற்றும் பாவனைப் பொருட்கள்
கிடைக்கவில்லையா?

உடனே விரையுங்கள்

கிடைக்கும் இடம்

## சுவேந்திரா ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி,
களுவாஞ்சிகுடி.

---

**வாடிக்கையாளர்களே!**

உங்களுக்குத் தேவையான

- பாவனைப் பொருட்கள்
- பரிசுப் பொருட்கள்
- இரசாயனப் பொருட்கள்

ஆகியவற்றை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள

இன்றே நாடுங்கள்


## மோகன் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி,
களுவாஞ்சிகுடி.

# "உள்ளம்" குறுக்கெழுத்துப் போட்டி இல. 1.

## நடத்துபவர் — "கானா மாவன்னா"

— — — — — — இங்கே கத்தரிக்கவும் — — — — — —



— — — — — — இங்கே கத்தரிக்கவும் — — — — — —

இடமிருந்து வலம்

1. மலையில் வாழ்ந்த மக்கள் வழிபட்ட தெய்வத்தின் பெயர்.
5. பராசக்தியின் மறுபெயர்.
6. கான வேட்டுவனுக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு.
7. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும்.
8. தங்கத்தின் தரத்தையறிய இப்படி பார்ப்பதுண்டு.
9. பெண்களின் ஏழு பருவங்களில் ஒன்று.
10. தேர்தலில் நிற்கும் அபேட்சகர்களுக்கு இது முக்கியமாகக் கொடுக்கப்படும்.
11. கன்னியர்களிடமிருந்து இதைப் பெறுவதை காளையர்கள் பெரும் பேறுகக் கருதுவார்கள்.
12. இந்திரனின் படைக்கலத்தில் ஒன்று.
13. அரசன் முதல் ஆண்டிவரை இதற்காகவே பாடுபடுவார்கள்.

மேலிருந்து கீழ்

1. கன்னிப் பெண்ணை இப்படியும் அழைப்பார்கள்.

2. பெரிய மனிதர்கள் என்று பலரால் கருதப்படுபவர்கள் சில வேளைகளில் இப்படியும் நடப்பதுண்டு.

3. மக்களை ஆள்பவன் மாறிக்கிடக்கிறான்.

4. துணையை இழந்து உயிர்வாழாத ஒரு பறவையைக் குறிக்கும் ஒரு சொல்.

5. கோயில்களில் வருடம் ஒருமுறையேனும் இது நடைபெறுவதுண்டு.

8. உண்ணுமல் தெய்வ நம்பிக்கையுடன் இருத்தலைக் குறிக்கும்.

9. செல்வம் இப்படியாகுவதை எல்லோரும் விரும்புவார்கள்.

11. பெருக்கெடுத்துச் செல்லும் நதிக்கு புகலிடமளிக்கும் இடம்.

## போட்டியாளர்கள் கவனத்துக்கு

1. அடைக்கப்படவேண்டிய கூடுகளை, திருத்தமாகவும், தெளிவாகவும் பூர்த்திசெய்து கீழ்காணும் முகவரிக்கு 10-12-1977 ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவேண்டும்.

2. வயது வேறுபாடின்றி சகலரும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

3. பிரசுரிக்கப்பட்ட போட்டிக் கூப்பனுடன் வரும் விடைகளே ஏற்றுக்கொள்ளப்படும்.

4. சரியான விடைகள் அதிகமானேரால் சமர்ப்பிக்கப்படுமிடத்து அதிஸ்ட சீட்டு மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இங்கு இதற்கென இயங்கும் ''ஆசிரியர்கள் குழு'' வின் தீர்ப்பே இறுதி முடிவாக அமையும்.

5. சரியான விடைகள் அனுப்பிய அனைவரினதும் பெயர்கள் சரியான விடையுடன் அடுத்த வெளியீட்டில் பிரசுரிக்கப்படும்.

6. காகித உறையின் இடதுபக்க மூலையில் ''உள்ளம் குறுக்கெழுத்துப் போட்டி I'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி

**"உள்ளம்" ஆசிரியர் குழு**

மட் / பட்டிருப்பு ம. வி.

களுவாஞ்சிக்குடி.

7. பரிசு விபரம் பின்வருமாறு:-

முதலாம் பரிசு ரூபா 15/-

இரண்டாம் பரிசு ரூபா 10/-

மூன்றும் பரிசு ரூபா 5/-

**அங்கத்தவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!**

பெருமளவு தொகையினை நகை அடைவு மூலம்
குறைந்த வட்டியிற் பெற
ஒழுங்கு செய்துள்ளோம்.

**மாணவர்களே!**

உங்கள் எதிர்கால நல்வாழ்விற்கு
இன்றே எங்கள் கிராமிய வங்கியில்
சேமிப்புக் கணக்கொன்றை ஆரப்பியுங்கள்.

# கிராமிய வங்கி

## பழுகாமம் மண்டூர் நவகிரி ப. நோ. கூ. சங்கம்

கோயிற்போரதீவு,
பெரியபோரதீவு.

---

**குறைந்த விலையில் சிறந்த ரக புடவைகளுக்கு**

நாடுங்கள்

## "நெசவாளர் கூட்டுறவு"

உங்களுக்குத் தேவையான
பிறின்டட் வொயில் சேலை
தைத்த சேட். மற்றும் ஆடைகள்
கட்டாரி சாறன்
பிஜாமா சாறன்
பட்டிக் சாறன்
மற்றும்
படுக்கை விரிப்புகள், துவாய், தலையணையுறை,
கைலேஞ்சு ஆகியவற்றிற்கு
ஒரே புடவை நிலையம்

# "நெசவாளர் கூட்டுறவு"

உங்கள் ஆதரவை நாடும்

அரசாங்க விடுதி வீதி,
கல்லடி., மட்டக்களப்பு.

மட்டக்களப்பு புடவை நெசவாளர்
கூட்டுறவுச் சங்கம்.

மட்டக்களப்பு பொருளாதாரத்தின் முக்கிய அம்சம்
கால்நடை அபிவிருத்தியாகும்.

கால்நடை வளர்ப்பாளர் என்ற வகையில்
முதன் முதலாகக் கூட்டுறவுச் சங்கமாக அமைந்த
தனிப் பெருமை பட்டிருப்புத் தொகுதிப்
பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கத்திற்கே உரியதாகும்.

எங்கள் சேவை நாட்டிற்குத் தேவை என்பதில்
பெருமிதமடைகின்றோம்.

**பட்டிருப்புத் தொகுதிப்**
**பாற்பண்ணைக் கூட்டுறவுச் சங்கம்**

வெல்லாவெளி.

❋ பொருளாதார
❋ சமூக
❋ கலாச்சார

நலன்களுக்கு ஊக்கமளிப்பதும்
கூட்டுறவுக் கொள்கையே.

மாணவரின் இலக்கியப் படைப்பிற்கு
எமது நல்லாசிகள்,

**மண்முனை தென் எருவில்**
**ப. நோ. கூ. சங்கம்**

களுவாஞ்சிகுடி.

இப்பிரசுரம் மட்டக்களப்பு கத்தோலிக்க அச்சகத்தில் முகாமையாளர் அவர்களால் அச்சிடப்பட்டு, பட்டிருப்பு மகா வித்தியாலய இலக்கிய மன்றத் துணையாசிரியர் வே. அமலநாதன் அவர்களால் 1-10-77ல் வெளியிடப்பட்டது.